தமிழ்
மரபு
அறக்கட்டளை
பன்னாட்டு
அமைப்பு

தமிழ் மரபுத் தினை

Bulletin of Tamil Heritage Foundation *international* - THFi

மார்ச் – 2026

41

தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பின்

தமிழ் மரபுத் திணை மாதாந்திர இதழ்

Tamil Marabu Thinai

தமிழ் மரபுத் திணை — 41

திருவள்ளுவர் ஆண்டு 2057 – பங்குனி

[மார்ச் — 2026]

தமிழ் மரபுத் திணை

ஆசிரியர்:
முனைவர் க. சுபாஷிணி
பொறுப்பாசிரியர்:
மரிய ஜெரின்

Websites:
https://www.tamilheritage.org
https://academy.tamilheritage.org

Facebook:
Tamil Heritage Foundation
THF Student Heritage Network
Tamil Heritage Foundation Research - Korea India
Der Kural Des Thiruvalluvar

Youtube:
https://www.youtube.com/thfichannel

Instagram:
https://instagram.com/TamilHeritageFoundation

Twitter:
https://twitter.com/HeritageTamil

E-mail: mythforg@gmail.com

THFi - HQ: Germany

Branches: India, Srilanka, Malaysia, Denmark, Norway, France, USA.

Thinai Monthly Newsletter:
https://thf-news.tamilheritage.org/category/thinai

ஆசிரியர் குழு :

1. முனைவர் க. சுபாஷிணி
2. முனைவர் தேமொழி
3. முனைவர் சிவ. இளங்கோ
4. முனைவர் கௌதம சன்னா
5. முனைவர் பக்தவத்சல பாரதி
6. முனைவர் கண்ணன் நாராயணன்

Attribution-NonCommercial-ShareAlike
4.0 International (CC BY-NC-SA 4.0)

~·~·~·~·~·~·~

குறிப்பு:
தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பின் பதிப்பகப் பிரிவின் வெளியீடு இது. இந்த நூல் தமிழ் ஆய்வுப்புலத்தின் தேவை கருதி அனைவருக்கும் இலவசமாக வழங்கப்படுகிறது. இந்நூலை மறுபதிப்பு செய்ய விரும்புவோர் அல்லது ஏதாவது ஒரு வகையில் தங்கள் படைப்புகளில் பயன்படுத்த விரும்புவோர் தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பினைத் தொடர்பு கொண்டு அனுமதி பெற்று உசாத்துணைகளை வழங்கி மீள்பதிப்பு செய்யலாம்.
- தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பின் பதிப்பகப் பிரிவு

அட்டைப்பட உதவி:
The Fourth Indian Library Congress at Anna Centenary Library, Chennai, on 16th and 17th February 2026.

இணையதள முகவரி: https://tamilheritage.org

தமிழ் மரபுத் திணை இதழுக்குத் **தங்களுடைய படைப்புகளை** அனுப்ப விரும்புபவர்கள் தங்களுடைய வரலாறு, மொழியியல், தமிழ் இலக்கியம், சமூகவியல் மற்றும் மானிடவியல் பொருண்மைகளில் அமைந்த படைப்புகளை
editorthfjournal@gmail.com
என்ற **மின்னஞ்சல் முகவரி**க்கு அனுப்பி வைக்கலாம்.

உள்ளடக்கம்

தலையங்கம்.....7

மகளிர் தின நல்வாழ்த்துகள்!.....11

1. உலகத் தரத்தில் பொருநை அருங்காட்சியகம்
.....14

2. சங்க இலக்கியத்தில் பொதுவுடைமை.....29

3. ஒரு கோபுரத்தின் கதை.....34

4. வரலாற்று ஆதாரங்களுடன் பாண்டியன்
தலையாலங்கானத்து செருவென்ற
நெடுஞ்செழியனின் காலம்.....40

5. சிகை கொற்றன்.....59

6. கண்ணகி கோவிலும் வைகைப்
பெருவெளியும்: நூல் விமர்சனம்.....65

7. கன்னிமாரா நூலகத்தில் கார்ல் மார்க்ஸ் சிலை
.....74

8. சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர்.....77

9. தமிழ்த் தாத்தா உ.வே.ச.....81

10. கடைசி பஸ்.....85

11. பரணர்.....90

12. தழும்பன் வரலாறு.....94

13. தாய் மொழியைக் கொண்டாட வேண்டும்..102

14. AI என்ன செய்யும்? சிலப்பதிகாரத்தை வாசிக்க வைக்கும்!.....105

15. தொல்லியல் நோக்கில் சங்ககாலம்: நூல் அறிமுகம்.....112

16. தமிழ் மரபு அறக்கட்டளை நிகழ்ச்சிகள்.....131

க. உலகத் தாய்மொழி நாளை முன்னிறுத்திய தொடர் உரையரங்கம்.....131

17. தமிழ் மரபு அறக்கட்டளை செயல்பாடுகள்..135

க. இணையவழி திசைக்கூடல் நேரலைகள்.135

உ. புகழ் வணக்கம்.....139

ங. நூல் பரிசளிப்பு.....140

தலையங்கம்

— முனைவர் க. சுபாஷிணி

வணக்கம்.

தமிழ் மரபுத் திணை மாதாந்திர இதழ் வழி உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

மொழி ஓர் இனத்தின் அடையாளம். ஒவ்வொரு மனிதருக்கும் தனது தாய் மொழியை போற்றிக் கொண்டாடி அதனை வளர்க்கும் உரிமை இயல்பானது மட்டுமல்ல அடிப்படையானதும் கூட. ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி மாதம் 21 ஆம் தேதியை உலகத் தாய்மொழிகள் தினமாக

ஐக்கிய நாடுகள் சபை பிரகடனப்படுத்தியுள்ளது. தாய் மொழியை உயர்த்தி பிடிக்கும் வகையில் ஆண்டுதோரும் மக்கள் மனதில் தாய்மொழி தொடர்பான சிந்தனைகளை ஆக்கப்பூர்வமாக கொண்டு செல்லும் நோக்கத்தோடு இந்த முயற்சி செயல்படுகிறது.

இந்த ஆண்டு உலகத் தாய்மொழிகள் தினத்தை தமிழ் மரபு அறக்கட்டளை தமிழ் இலக்கிய ஆய்வுக்கு என்று தனித்துவத்துடன் செயல்படுத்தியது என்பதை குறிப்பிட வேண்டும். தமிழ் ஆய்வுலகம் நன்கு அறிந்த அறிஞர் புலவர் பொ. வேல்சாமி அவர்களது சொற்பொழிவுகளை நான்கு வாரங்களுக்கு ஏற்பாடு செய்து ஆழமான விரிவான ஆய்வுப் பார்வையுடன் கூடிய நான்கு தொடர்யுரையை பிப்ரவரி மாதம் நிகழ்த்தியதை நினைத்து பார்த்து தமிழ் மரபு அறக்கட்டளை பெருமை கொள்கிறோம்.

தமிழ் ஆய்வுலகம் தனது ஆய்வுப் பார்வையை குறுகிய ஒரு எல்லைக்குள் வைத்துக் கொள்ளாமல் பார்க்கத் தவறிய அல்லது ஒதுக்கிய பல்வேறு தலைப்புகளை மேல் வாசிப்பு செய்து தங்கள் கவனத்தை செலுத்த வேண்டிய தேவை உள்ளது. இன்றைய இணைய உலகில்

எண்ணற்ற நூல்கள் நமக்கு கிடைக்கின்றன. ஆயினும் அவற்றை வாசிக்க நாம் முயற்சிகளை மேற்கொள்கின்றோமா என்பது நம் முன்னே நிற்கும் பெரும் கேள்வி. அதற்கு "இல்லை" என்பதுதான் விடையாகின்றது.

கடந்த இரண்டு நூற்றாண்டுகளில் அச்சுப்பதிப்பாக்கம் கண்ட தமிழ் பழம் நூல்கள் மேல் வாசிப்புக்கு உட்படுத்தப்பட வேண்டும். அதுபோல ஏராளமான நூல்கள் பற்றிய செய்திகள் தமிழ் ஆய்வுலக மாணவர்களை எட்டவில்லை என்பது பெரும் துயரம். ஆகவே நம் கண் முன்னே மாபெரும் பணி ஒன்று தொடங்கப்படாமல் இருக்கின்றது என்பதை தமிழ் ஆய்வுலகம் முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். அத்தகைய தேடலுக்கு ஒரு தொடக்கப்புள்ளியாக அமைந்தது பிப்ரவரி மாதம் முழுவதும் வார இறுதியில் நிகழ்த்தப்பட்ட தொடர் உரை நிகழ்ச்சி.

ஒவ்வொரு மாதமும் பல்வேறு வகையான செயல்பாடுகளை தமிழ் மரபு அறக்கட்டளை மேற்கொண்டு வருகின்றோம். நீங்களும் இணைந்து கொள்ளலாம்.

தமிழால் இணைவோம்!

அன்புடன்
முனைவர் க சுபாஷிணி
தலைவர்
தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு

மகளிர் தின நல்வாழ்த்துகள்!

— மரிய ஜெரின்

மாதாந்திர மின்னிதழாக வெளிவரும் தமிழ் மரபுத் திணை இதழ் வழியாக உங்களுடன் உரையாடுவதில் மகிழ்ச்சி.

தாய்மொழி, தாய்நாடு என்ற சொற்கள் எல்லாம் பெண்களை மையப்படுத்தி இனயுணர்வை ஊட்டுகின்ற சொற்கள். ஆனால் நடைமுறையில் சமூகம், அதிகாரம் என்று வரும்போது ஆண்களுக்கு நிகராக பெண்களுக்கு வாய்ப்புகள் அமைகிறதா என்று பார்த்தால் அது கேள்விக்குறிதான். அறிவார்ந்த சமூகத்தை கட்டியெழுப்புவதற்கு பெண்களின் சமூகப் பங்கு மிகவும் இன்றியமையாதது.

இவ்விதழின் அட்டைப்படமாக இணைக்கப்பட்டிருப்பது பெண்கள் கோயில் கோபுரங்களில் அமர்ந்து படிப்பது போன்ற படம். இப்படத்தை ஒரு பழைமையும் புதுமையும் சேர்ந்த ஒரு கலவையாக நான் பார்க்கின்றேன். கல்வி அறிவுதான் மாற்றத்திற்கான தொடக்கப்புள்ளியாக அமையும் என்பதில் மாற்று கருத்து இல்லை. அதேவேளையில் பெற்ற கல்வி அறிவை ஆக்கப்பூர்மான செயல்களுக்கு பயன்படுத்துவது அனைவரின் கடமையாகும் என்ற கருத்தை முன்வைத்து மகளிர் தினத்தை கொண்டாடும் பெண்களுக்கும் அவர்களுக்கு துணையாக நிற்கும் அனைத்து தரப்பினருக்கும் எனது வாழ்த்துகளை தெரிவிப்பதில் மகிழ்கிறேன்.

இவ்விதழில் சிறப்பம்சமாக பிப்ரவரி மாதம் நடைபெற்ற உலகத் தாய்மொழி நாளை முன்னிறுத்திய நான்கு தொடர் உரையரங்கமும் அதன் ஓர் அங்கமாக உலகத் தாய்மொழி நாளில் இணையவழி வெளியீடு கண்ட நமது தலைவர் முனைவர் க. சுபாஷிணி அவர்கள் எழுதிய ஐரோப்பியத் தமிழ் ஆவணங்கள் எனும் ஆய்வு நூல் இடம்பெறுகிறது.

புதிதாக இவ்விதழில் பெரிய மாற்றங்கள் இல்லையென்றாலும் அடித்தளத்தை உறுதிசெய்திருக்கிறது திணை மாதாந்திர மின்னிதழ். நன்றி!

அன்புடன்
மரிய ஜெரின்
பொறுப்பாசிரியர்
தமிழ் மரபுத் திணை இதழ்

1. உலகத் தரத்தில் பொருநை அருங்காட்சியகம்

— சிவ.க. மணிவண்ண சுந்தரம்

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் கடந்த 20 ஆம் தேதி திறந்து வைக்கப்பட்டு நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்ட பொருநை அருங்காட்சியகம் 23 டிசம்பர் 2025 முதல் பொதுப் பயன்பாட்டுக்கு வந்துள்ளது. அனுமதிச் சீட்டு எடுத்தவுடன் சி.எஸ்.ஆர் திட்ட மேலாண்மையில் இயங்கும் பேட்டரி கார் நம்மை அறிமுக அரங்கிற்கு அழைத்துச் செல்கிறது. கட்டிட /

அரங்க வளாகங்களில் மின்தூக்கி மற்றும் சக்கர நாற்காலி வசதி உள்ளது.

அறிமுக அரங்கில் காலக் கணிப்பையும் ஐந்து திணைகளையும் குறிக்கும் அருமையான வரைபடம் உள்ளது. இது நுண்கற்காலம் இரும்புக் காலம் எனக் காட்சிப் படுத்தப்பட்டுள்ளது. வரைப்படத்தின் முன் பகுதியில் உள்ள ஆடியோ புள்ளியில் நம் காலினை வைத்தால் நிற்கும் இடத்தின் மேற் கூரையில் உள்ள ஒலி பெருக்கி விரிவான வரலாற்றுத் தகவல்களை ஒலிக்கிறது. நாம் நகர்ந்ததும் ஒலிப்பது நின்று விடுகிறது. பார்வையாளர்களுக்கு விளக்கம் கொடுக்க நிறைந்த தகவல்கள் அறிந்த ஆர்வமுள்ள நல்ல இளம் வழிகாட்டிகள் உள்ளனர்.

3150 வருடம் பழமையான சிவகளை அகழாய்வுத்தள நெல்மணிகளும், 5300 வருடம் பழமையானதும் நம் தமிழர்களின் உலோகப் பயன்பாட்டு அறிவினைப் பறைசாற்றக் கூடியதுமான அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட இரும்பு ஆயுதமும் இங்குக் காட்சிப் படுத்தப்பட்டுள்ளது. இந்த வாளினை நாம் முன்பே ஓரிரு முறை தொட்டுப் பார்த்து உணர்ந்திருக்கிறோம் என்பது கூடுதல் மகிழ்வு.

அறிமுக அரங்கை விட்டு வெளியே வந்தால் சிவகளை அரங்கிற்குக் கூட்டிச் செல்ல பேட்டரி கார் தயாராக உள்ளது.

அரங்க / கட்டிட இடைவெளிகளில் பழமையான பொருட்களின் மாதிரிகளும் பத்தமடை பாய் உள்ளிட்ட பல்வேறு உள்ளூர் கைவினைப் பொருட்களும் விற்பனைக்காகக் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன. இவற்றையெல்லாம் பார்த்து / ரசித்து / விலை கொடுத்து வாங்கிக் கொள்ளலாம்.

இந்த சிவகளை அரங்கில் சிவகளை அகழாய்வில் கண்டெடுத்த பொருட்கள் மட்டுமின்றி அருகாமை வாழ்விடங்களில் கண்டெடுக்கப்பட்ட

தங்கம் உள்ளிட்ட பல்வேறு பொருட்களும் காட்சிமைப் படுத்தப்பட்டுள்ளது. பெரிய திரையில் பிம்பப்படுத்திக் காட்டப்படுகிற இரும்புத் தாது வெட்டி அள்ளுதல் முதல் உருக்கி வார்ப்பது வரையிலான செயல்முறை விளக்கங்களைத் தொடுதிரையை நாமே தொட்டு நகர்த்தி இயக்கி அறியலாம். திரையில் இரும்பு உலைக்குக் காற்று ஊதுகிற காட்சி தெரிகையில் நெருப்பு உலைக்குக் காற்று ஊதும் துந்துபி என்கிற ஊதுகுழலின் பெடலினை நமது காலால் நாமே இயக்கி காற்று ஊதப்படுவதை நேரடி அனுபவமாக உணரலாம். இது ஒரு மகிழ்வான கூடுதல் சிறந்த அனுபவம்.

அறிமுக அரங்கில் காட்சிமைப் படுத்தப் பட்டிருக்கும் 5300 வருடங்கள் பழமையான இரும்பு வாள் மாதிரி ஒன்றை யாம் இத்தொடுதிரை இயக்கம் வழியாய் செய்து மகிழ்ந்தோம். எம் முன்னோர்களோடு இணைந்து யாமே நேரடியாக இரும்பு உலையில் இயங்கியதை போன்ற மகிழ்வு மனதுக்குள் பிரவாகமாய் பொங்கிப் பெருகி நினைவுகளைக் காலச் சக்கரத்தில் 5300 ஆண்டுகள் பின்னோக்கிக் கடத்தியது.

மின்னணு காட்சிமை சிவகளையை உணர்ந்து / பார்த்து / அறிந்து / தெளிந்து வெளியே வந்தால் ஆதிச்சநல்லூர் பிளாக் அழைத்துச் செல்ல அடுத்த பேட்டரி கார் தயார் நிலையில் உள்ளது.

இந்த பிளாக்கின் நான்கு காட்சியகங்களில் மூன்று ஆதிச்சநல்லூருக்கும் ஒன்று துலுக்கர் பட்டிக்கும் ஒதுக்கப் பட்டுள்ளது. துலுக்கர் பட்டி குறியீடுகளும் சிந்து சமவெளி குறியீடுகளும் சம காலத்தவை என்பது ஆய்வாளர்களால் உறுதிப் படுத்தப்பட்ட தகவல்.

ஜெர்மனியின் ஜாகோர் 1876லும் இந்தியத் தொல்லியல் துறை(ASI) அதிகாரி அலெக்ஸாண்டர் ரியா 1899 முதல் 1904 வரையிலும் மிகப்பெரிய அளவில் நடத்திய அகழாய்வுகளில் தங்கத்தினால் ஆன நெற்றிப் பட்டயம் உள்ளிட்ட பொருட்கள் கண்டறியப்பட்ட ஆதிச்சநல்லூரில் பூமிக்குள் முதுமக்கள் தாழிகள் எப்படி இருக்கிறது என்பது இங்குச் செயற்கை தத்ரூபமாகக் காட்சிப் படுத்தப் பட்டுள்ளது. இந்தச் செயற்கை அமைப்பானது, 2022ல் மத்திய அரசு அமைக்க அடிக்கல் நாட்டியுள்ள ஆதிச்சநல்லூர் சைட் மியூசியத்திற்கான சிறிய மாதிரி (மினியேச்சர்) போலவே உள்ளது.

சுடுமண்ணில் செய்யப்பட்ட மிகச்சிறிய புலி ஒன்று காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. நிறைய நாணயங்களும் சேகரித்து வைக்கப்பட்டுள்ளது.

நம்பியாற்றங்கரையில் உள்ள முக்கிய தலங்கள் ஒளிவரைபடமாக வரையப்பட்டு அது நமக்கு ஒலியாகவும் விவரிக்கப்படுகிறது.

அடுத்த கட்டிடம் கொற்கை; அங்கே முழுக்க முழுக்க கொற்கை பொருள்கள், சங்குகள், வளையல்கள், கடல் பொருள்கள்.

மேற்குலகம் அதுவரை கண்டிராத கொற்கை முத்துக்களையும் மிளகையும் கிரேக்கத்திற்கு ஏற்றுமதி செய்த இந்தியாவின் முசிறி துறைமுகம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ள உலகின் முதன்மையானதும் பழமையானதும் நான்கு / ஐந்தாம் நூற்றாண்டு காலத்தியதுமான வியன்னாவின் ஆஸ்திரியத் தேசிய நூலகத்தில் (Austrian National Library) பாதுகாக்கப்படும் 674 சென்டிமீட்டர் நீளமும், 34 சென்டிமீட்டர் அகலமும் கொண்ட இந்தியாவிற்கு (இந்தியா வரை) என்ற பெயருடைய நீண்ட சுருள் வரைபடமான ரோமானிய வணிகப் பாதை வரைபடம் Tabula

Peutingeriana (டாபுல பெயிட்டிங் கேரினாயா) ஒளிப்பிரதியாகக் காட்சிப் படுத்தப்பட்டுள்ளது.



இந்த வரைபடத்தின் வலது பக்கத்தில் திராவிட எனப் பொருள் கொள்ளும் DAMIRICE என்றும் அதற்குச் சற்று கீழே சங்க இலக்கியங்களில் வஞ்சி என்றும் 16 ஆம் நூற்றாண்டு ஐரோப்பியர்கள் வருகை காலங்களில் கிராங்கனூர் என்றும் அழைக்கப்பட்ட நமது மேற்குக்கரை முசிறி துறைமுகம் முசிரிஸ் (Muziris), என்ற பெயரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (தமிழ்நாட்டின் திருச்சி மாவட்டம் காவிரி ஆற்றின் கரையில் அமைந்துள்ள "முசிறி" என்ற ஊருடன் இதனைக் குழப்பிக் கொள்ள வேண்டாம்).

பதினான்காம் நூற்றாண்டில் பெரியாறு நதியின் போக்கில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக இந்த முசிறி துறைமுகம் வணிக முக்கியத்துவம் இழந்து

கேரளா மாநிலம் திருச்சூர் மாவட்டத்தின் ஒரு பகுதியாக கொடுங்கலூர் என்கிற பெயரில் சிறு கிராமமாக உயிர்ப்போடு உள்ளது.

அப்போதைய ஐரோப்பியர்கள் இந்தியாவில் நுழைந்த போது இங்கு அவர்களைப் பயமுறுத்திய யானைகள் மற்றும் தேள்கள் வளரும் இடங்கள் குறித்த குறிப்புகளும் இலங்கை 'தப்ரபேன்' (Taprobane) என்றும் இந்த வரைபடத்தில் குறிக்கப்பட்டுள்ளது.

இந்த வரைபடம் பயணிகளுக்கான வழித்தடங்களை (Itinerary) மட்டும் மையமாகக் கொண்டு வரையப்பட்டது, புவியியல் ரீதியான துல்லிய வரைபடம் இல்லை என்றாலும் முக்கியத்துவம் கொண்டதே.

அடுத்து சுமார் 50 பேர் இருக்கக் கூடிய 5D திரையரங்கம் உள்ளே சென்றவுடன் நமக்குக் கருப்பு கண்ணாடி தரப்படுகிறது, இடுப்பு இடைவார் அணிந்து இருக்கையில் அமைக்கப் பட்டிருக்கும் கைப்பிடியைப் பிடித்துக் கொள்ள அறிவுறுத்தப்பட்டுத் தொடர்ந்து படம் திரையிடப்படுகிறது. பொதிகை மலையில் தாமிரபரணி ஓடி வரும் அழகுடன் காட்சி

துவங்கும் 10 நிமிடக் காட்சி மிகப் பிரமாண்டமாக விரிகிறது. இருக்கைகளில் இருக்கும் நாமும் அந்த காட்சிகளோடு ஓடுகிறார்போல் அரங்கமும் இசையும் பின்னணி ஒலிகளும் காட்சிகளும் வடிவமைக்கப் பட்டுள்ளது. நமக்கு எதிர்த் திசையில் ஓடி வரும் பாறைகளும், மீன்களும் நம் மீது மோதுவதைப் போலவும் பாய்ந்து வரும் புலி நம்மை கடப்பதுவும் போன்ற இயற்கைச் சூழல்களை ரசிக்க ஓர் அலாதி ரசனையும் மனமும் தேவை.

மழை பொழிவது போன்ற திரைக்காட்சியின் போது நம் மீதும் மழைச் சாரல் விழுவது போலச் செயற்கை முறையில் தண்ணீர் மேலிருந்து தூவப்படுகிறது. இது ஒரு பரவசத்தினைத் தருகிறது. ஆற்றில் பொதிகை மலைக்காட்டு வழியே நாமே படகில் செல்வது போல உணர

முடிகிறது. அங்கிருந்த யானைகளையும் பழங்குடி சகோதரர்களையும் தேன் கூட்டினையும் ரசிக்கையில் அருகில் வந்த தேனீக்கள் நம் மீது மோதி கிச்சு மூச்சு காட்டியது. இந்தப் படங்களைக் கண்டு மகிழ்ந்து வியந்து போற்றிடப் பெரிய தொல்லியல் அறிவெல்லாம் தேவை இல்லை. நல்ல திறந்த மனமும் மண் மீதான பற்றும் இருந்தால் போதுமானது.

அங்கிருந்து நகர்ந்து தொடர்ந்து 7D திரையரங்கு, அங்கே 20 பேர் அமரக் கூடிய ஒரு படகு அமர்ந்த பின் பிரத்தியேகமான கண்ணாடி அங்கிருக்கும் ஊழியர்களால் நமக்கு அணிவிக்கப்பட்டுத் திரைக்காட்சிகள் நகரத் துவங்குகின்றன. திரைக் காட்சிகளில் பிரம்மாண்டம் என்றால் அப்படியொரு பிரம்மாண்டம் கடற்கரைக்குச் செல்லும் காட்சி வருகையில் நம் மீது தீடீர் குளிர் காற்று வீசுகிறது. யானை குளிக்கையில் நம் மீதும் தண்ணீரைத் தூவுகிறது. நிஜமாகவே நனைந்து விடுகிறோம். உலகின் பண்டைய தொழிலும் தமிழர்கள் மிகுந்த தேர்ச்சி பெற்றிருந்த கடல் சார் தொழில்களில் ஒன்றான முத்துக்குளித்தலில் நம்மவர்கள் கடலுக்குள் மூழ்கும் போது நாமும்

இணைந்து மூழ்குவது போலான காட்சி அமைப்பு மிகச் சிறப்பு.

நம்மை முப்புறமும் திரும்பிப் பார்க்கச் சொல்லுகிறார்கள். பெரிய கடலும் அதற்குள் நீந்தும் மீன் வகைகள், முத்துகள் எனக் காட்சிகள் விரிகையில் இரும்பு ஆயுதம் தயாரிக்கும் பட்டறையில் உருவாகும் தீப்பொறி நமது கண்ணுக்குள் வந்து விழுகிற காட்சியை உணர்ந்து முடிப்பதற்குள் தயாரான இரும்பு ஆயுதத்துடன் தயாரித்த சகோதரர் நம்மை இடித்தபடி முன்னே வந்து நின்று சிநேகமாய் சிரிக்கிறார்.

வயல்வெளியில் விவசாயிகள் நாற்று நடுவது, தூத்துக்குடி கடலில் சங்கு /முத்து குளிப்பது, தேரிக்காடு இரும்பு உலை எனப் பல காட்சிகள் 10 நிமிடங்கள் பரவசத்தால் நம்மை திணற வைக்கிறது.

70 ரூபாய் செலவில் நாம் 5500 வருடங்களுக்கு முந்தைய நம் தமிழர்களின் பண்பாட்டை / வரலாற்றை / தொழில்நுட்பத்தை / வாழ்வியலைப் புரிந்து கொள்ள இந்த அருங்காட்சியகம் உதவுகிறது.

பெரிய உலகத்தரம் வாய்ந்த அருங்காட்சியகம் நமக்குக் கிடைத்து விட்டது. “நாம் ஒவ்வொருவரும் இந்த அருங்காட்சியகத்தினைப் பார்த்துப் பாதுகாக்க வேண்டும்”

பொருநை அருங்காட்சியகம் செல்வதற்கு திருநெல்வேலி புதிய பேருந்து நிலையத்திலிருந்து நேரடிப் பேருந்துகள் இயக்கப்படுகிறது.

நல்ல தரமான சுத்தமான சுகாதாரமான கழிவறைகள் உள்ளது. மக்களாகிய நாமும் கடமை உணர்ந்து அவற்றினை நல்லமுறையில் உபயோகித்து சுத்தமாக வைத்திருந்து அடுத்து பயன் படுத்துவோருக்கும் அரசுக்கும் நிர்வாகத்துக்கும் உதவ வேண்டும்.

பள்ளி/கல்லூரி ஆசிரியர்கள் மட்டுமின்றி மாணவர்களை நன்முறையில் பயிற்றுவிக்கும் ஆசிரியப் பெருந்தகைகளும் தனியார்ப் பள்ளி நிர்வாகங்களும் வாய்ப்புள்ள போது நமது தொன்மையைக் காட்டும் இந்த அருங்காட்சியகத்தினை மாணவர்கள்

பார்வையிட அவசியம் ஏற்பாடு செய்ய வேண்டும்.

பின்குறிப்பு: மதுரை லேடிடோக் கல்லூரி பேராசிரியை சகோதரி பாப்பாவையும் எம்மையும் இந்தப் பொருநை அருங்காட்சியகத்திற்கு இட்டுச் சென்றவரும் உலகின் பெரும்பகுதி அருங்காட்சியகங்களுக்கெல்லாம் பயணித்து அவற்றை அப்படியே கண்ணில் விரிய வைக்கும் **“உலக அருங்காட்சியகங்களினூடே ஒரு பயணம்”** என்கிற மூன்று தொகுதி புத்தகங்களைச் சமூகத்திற்குத் தந்துள்ள தமிழ் மரபு அறக்கட்டளை தலைவர் எமது இனிய சகோதரி முனைவர் சுபாஷிணி கனகசுந்தரத்துக்கும் அருங்காட்சியகத்தினை முழுமையாகக் கண்டு அனுபவிக்க வழிகாட்டிய

தமிழ்நாடு தொல்லியல் துறை தொழில்நுட்ப இணை இயக்குநர் முனைவர் இரா. சிவானந்தம் IASக்கும் அருங்காட்சியக நிர்வாக அதிகாரிகளுக்கும் எமது நன்றிகள்.

வாழ்த்துகளும் பாராட்டுகளும் நன்றியும்:

தமிழ்நாடு அரசுக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சருக்கும் கோவை உலகச்செம்மொழி மாநாட்டில் நமது ஆதிச்சநல்லூரையும் ஒரு பேசுபொருளாகப் பட்டியலிட வைத்தவரும் தமிழக அரசில் நிதியோடு சேர்த்து தொல்லியலையும் நிர்வகிக்கும் அமைச்சர் மாண்புமிகு தங்கம் தென்னரசுக்கும், தொல்லியல் துறைச் செயலருக்கும் இயக்குநருக்கும் மாவட்ட ஆட்சியருக்கும் களத்தில் உயிர்ப்பாய் ஓய்வின்றிப் பணியாற்றிய அனைத்து மாவட்ட அருங்காட்சியக் காப்பாட்சியர்களுக்கும் அனைத்துத்துறை அலுவலர்களுக்கும் எமது பாராட்டுக்களும் வாழ்த்துக்களும் நன்றிகளும்.

நல்ல திறமையான அதிகாரிகளும் அதிகாரிகளை வேலை வாங்கும் திறனும் ஆர்வமும் அதற்கேற்ற ஞானமும் உள்ள ஒருவர் மூத்த அமைச்சராகவும் இருந்து விட்டால் ஊருக்கு / சமூகத்திற்கு

என்னென்ன பணிகளை எப்படி விரைந்து செய்து முடிக்க முடியும் என்பதற்கு நமது நடப்புக் கால முன்னுதாரணம் மாண்புமிகு தங்கம் தென்னரசு ஆவார். அவருக்குத் தனிப்பட்ட முறையிலும் எமது பாராட்டுக்களும் நன்றிகளும்.

அருங்காட்சியக அனுமதிக் கட்டணம்:

- பெரியவர்களுக்கு ரூபாய் 20
- சிறியவர்களுக்கு ரூபாய் 10
- மாணவர்களுக்கு ரூபாய் 5
- புகைப்படம் எடுக்க ரூபாய் 30
- கேமராக்கள் மூலம் வீடியோ எடுக்க ரூபாய் 100
- தனித்தனி 5D&7D தொழில் நுட்பத் திரைகளில் திரையிடப்படும் தமிழர் தொன்மை வரலாற்றினைக் கண்டு தெளிய தலா ரூபாய் 25

2. சங்க இலக்கியத்தில் பொதுவுடைமை

— அருள் மெர்வின்

சங்ககாலத்தில் நடு ராத்திரியை 'நடுநாள்' என்றிருக்கிறார்கள். நாள் என்றால் சங்ககாலத்திலும் day–தான். நியாயமாக, நண்பகலைதான் நடுநாள் என்றிருக்க வேண்டும். நடுராத்திரியை நடுநாள் என்று ஏன் அழைத்தார்கள் என்று யோசித்துப் பாருங்கள்? தமிழில் யோசித்தால் புரிந்துவிடும். இரண்டு நாட்களுக்கு நடுவே இரவுப் பொழுது வருவதால் அதை நடுநாள் என்றிருக்கிறார்கள் (00:00).

நள்ளிரவுப் பொழுதை இரண்டு நாட்களுக்கு நடுவேயான பொழுது என்று யோசித்திருப்பது சங்ககாலத்தில் மனித சிந்தனைத் திறனை முழுவதும் உபயோகித்திருக்கிறார்கள் என்பதற்கான ஓர் எளிய உதாரணம். இப்படி யோசித்தவர்கள் மனித சமூகத்தைப் பற்றி என்னவெல்லாம் யோசித்திருப்பார்கள்? சமூக ஏற்றத்தாழ்வுகள் பற்றி எப்படியெல்லாம் யோசித்திருப்பார்கள்?

பணம் இருக்கிறது. பணத்தை வைத்து நம் வாழ்நாளில் இதையெல்லாம் அனுபவித்துவிட வேண்டும் என்று லிஸ்ட் போட்டு ஒவ்வொன்றாக அனுபவிக்க ஆரம்பித்தால் நாம் அனுபவிக்காத விஷயங்களின் லிஸ்டுதான் நீண்டுகொண்டு செல்லும்.

“துய்ப்பேம் எனினே, தப்புந பலவே.” (புநா 189)

துய்த்தல் என்றால் அனுபவித்தல். துய்க்க வேண்டும் வேண்டும் என்று இறங்கிவிட்டால் தப்பிச் செல்பவை பலவாக இருக்கும். தப்புந பலவே.

“செல்வத்துப் பயனே ஈதல்” (புநா 189)

தேவைக்கு அதிகமாகப் பணம் கையில் இருந்தால் அதைக் கொடுத்துவிடுங்கள். அதை வைத்து அடுத்தவருக்கு உதவுங்கள். எது தேவைக்கு அதிகமானது?

“உண்பது நாழி உடுப்பவை இரண்டே” (புநா 189)

உயிரைக் காக்க உணவு. உடலைக் காக்க உடை. இந்த இரண்டைத் தவிர அத்தனையும்

தேவைக்கு அதிகமானவை. வீடு, காரெல்லாம் தேவையில்லையா?

“பிறவும் எல்லாம் ஓர் ஒக்குமே” (புநா 189)

தேவைகள் எல்லோருக்கும் ஒரே மாதிரிதான் இருக்கும். நம்மிடம் இருப்பதைத் தவிர இன்னொன்று நமக்குத் தேவை என்றால் இன்னோருவருக்கும் அவரிடம் இருப்பதைவிட இன்னொன்று தேவையாக இருக்கும். உயிரைக் காக்க உணவு, உடலைக் காக்க உடை என்ற இரண்டு தேவைகளைத் தவிர பிற எல்லா தேவைகளும் ஒரே மாதிரியானவைதான் (பிறவும் எல்லாம் ஓர் ஒக்குமே).

நாம் உழைத்துச் சம்பாதித்த பணம் கையில் இருக்கிறது. அதைச் செலவழிக்க உடலில் தெம்பு இருக்கிறது. ஏதோ செய்துவிட்டுப் போகிறோம். என்ன பிரச்சனை?

“நடுநாள் யாமத்தும் பகலுந் துஞ்சான்
கடுமாப் பார்க்குங் கல்லா வொருவற்கும்
உண்பது நாழி யுடுப்பவை யிரண்டே” (புநா 189)

இரவும் (‘நடுநாள்’ யாமத்தும்) பகலும் தூங்காமல் கடுமையாக வேலை பார்க்கும் படிக்க வாய்பில்லாத ஓவ்வொருவருக்கும்... தேவை வயிற்றுக்குச் சாப்பாடு, உடுக்க உடை. அவர்கள் அனைவருக்கும் உண்ண உணவும் உடுக்க உடையும் இல்லாதவரை நம்மிடம் உண்ண உணவும் உடுக்க உடையும் தவிர இருப்பதெல்லாம் தேவையில்லாதவை. அதனால் அவற்றைத் தேவையிருப்பவர்களுக்குக் கொடுத்து விடுங்கள். கொடுக்காவிட்டால்?!

“தெண் கடல் வளாகம் ‘பொதுமை’ இன்றி
வெண் குடை நிழற்றிய ஒருமையோர்க்கும்”
(புநா 189)

நாம் கொடுக்காமல் இருந்தால் நமக்கு மேலே இருக்கும் ஒருவன் நமக்குக் கொடுக்க மாட்டான். அவனுக்கு மேலே இருப்பவன் அவனுக்குக் கொடுக்க மாட்டான். கடைசியில், கடல் சூழ்ந்த இந்த நிலம் (தெண் கடல் வளாகம்) ‘பொதுமை’ இன்றி ஒரு கூட்டம் (ஒருமையோர்) மட்டும் எல்லாவற்றையும் தன் வசம் வைத்துக் கொண்டு ஒரு குடையின் நிழலின் கீழ் நம்மை ஆண்டு கொண்டிருக்கும் (வெண் குடை நிழற்றிய ஒருமையோர்க்கும்).

நம்மைவிட ஏழைகள் இருப்பதால் நம்மைவிடப் பணக்காரர்கள் இருக்கிறார்கள். நம்மால் ஆளப்படுபவர்கள் இருப்பதால் நம்மை ஆள்பவர்கள் இருக்கிறார்கள்.

புறநானூறு 189

“தெண் கடல் வளாகம் பொதுமை இன்றி
வெண் குடை நிழற்றிய ஒருமையோர்க்கும்,
நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்
கடு மாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்,
உண்பது நாழி; உடுப்பவைஇரண்டே;
பிறவும் எல்லாம் ஓர் ஒக்குமே;
செல்வத்துப் பயனே ஈதல்;
துய்ப்பேம் எனினே, தப்புந பலவே.”

பிகு: இந்த பாடலை கீழிருந்து மேலாக வாசித்த முயற்சிதான் மேலேயுள்ள பதிவு. ஏனென்றால், இந்த பாடல் ஒரு பிரமிடு. கீழேயிருந்துதான் மேலே பார்க்க முடியும். கீழே இருப்பவன் துய்ப்பவன். மேலே இருப்பவன் ஆள்பவன். உழைப்பவன் நடுவே சிக்கிக் கொண்டவன்.

3. ஒரு கோபுரத்தின் கதை

— முனைவர் இரா. கலைக்கோவன்

கோபுரங்களுக்குக்கூட கதை உண்டா எனக் கேட்கலாம். எல்லாக் கோபுரங்களுக்கும் கதை இருக்குமா என்பது தெரியவில்லை. ஆனால், சில கோபுரங்களின் கதைகள் கல்வெட்டுகளாகக் கண்முன் வளர்கின்றன.

பைஞ்ஞீலிக் கோபுரத்தின் கதை மூன்று கல்வெட்டுகளில் பதிவாகியுள்ளது. ஒரு கோயிலின் நுழைவாயிலும் அதன் மேலெழும் கட்டுமானமும்தான் கோபுரம். பலர் இறைவன் உள்ள கருவறைக் கட்டுமானத்தை கோபுரம் என அழைக்கிறார்கள். அந்த அமைப்புக்கு விமானம் என்று பெயர். 'திருப்பைஞ்ஞீலி' என்று திருவுடன் இணையும் பைஞ்ஞீலி கிராமம், திருச்சி

மாவட்டம், மண்ணச்சநல்லூர் அருகே உள்ளது. முதல் ராஜராஜன் காலந்தொட்டுக் கல்வெட்டுகள் பெற்று விளங்கும் இக்கோயில், தேவார மூவரால் பாடப்பெற்றது. வீதிகளையும் சேர்த்து இக்கோயில் நான்கு சுற்றுகளைக் கொண்டுள்ளது. இக்கோயிலின் மூன்றாம் சுற்றில் கி.பி. 8ஆம் நூற்றாண்டுக் குடைவரைக் கோயில் உள்ளது.

தென் தமிழ்நாட்டிலுள்ள இரண்டே சோமாஸ்கந்தர் குடைவரைகளில் இது ஒன்று. தமிழ்நாட்டின் சிறப்புக்குரிய இக்குடைவரையில் மட்டும்தான் உமையன்னை வலப்புறமும் சிவபெருமான் இடப்புறமுமாய் இடையில் குழந்தை முருகனுடன் அமர்ந்துள்ளனர். வேறெந்தக் குடைவரையிலும் இந்த இட, வல மாற்றம் இல்லை. இந்தச் சுற்றின் வாயிலாக கோபுரம் ஒன்றமைக்கச் சோழர் கால மக்கள் விரும்பினர். அதற்கான பணி மூன்றாம் குலோத்துங்க சோழர் ஆட்சியில் கி.பி. 13ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நடைபெற்றது. திரிபுவன வீரதேவராகக் கல்வெட்டுகள் கொண்டாடும் இம்மூன்றாம் குலோத்துங்கன், அப்பெயரிலேயே கும்பகோணம் அருகில் உருவாக்கிய திரிபுவன வீரேசுவரம் கோயிலின்

முதற்கோபுரம் போலவே, பைஞ்ஞீலிகோபுரமும் கட்டப்பட்டது.

பெரிய அளவில், ஏழு நிலைகள் கொண்டதாய் கோபுரத்தை உருவாக்கத் திட்ட மிட்டு, பணிகள் தொடங்கப்பட்டன. இக்கோபுரத்தின் துணை, தாங்கு தளங்களின் கட்டமைப்பைப் பார்த்தாலே, எத்தகு எதிர்பார்ப்புடன் இக்கோபுரம் உயரத் தொடங்கியது என்பது புரிந்துவிடும். குலோத்துங்கன் 31ஆம் ஆட்சியாண்டில் பதிவாகியுள்ள கல்வெட்டு, இக்கோபுரப் பணிக்கான செலவுகளைச் சந்திக்க, ஆதனூர் என்ற ஊரையே அதன் வருவாய், வரிகள் உட்பட மன்னர் அரசாணை வழிக் கோயிலுக்குக் கொடையளித்ததை உணர்த்துகிறது.

கீழ்த்தளம் எழும்போதே கட்டுமானச் செலவுகள் கைமீறிப் போய்விட்டன. ஆதனூர் வருவாய் போதவில்லை. அதனால், தம் 36ஆம் ஆட்சியாண்டில் பெரியகள்ளிக்குடி என்னும் ஊரை அதன்வரி, விளைவு உட்படக் கோயிலுக்களித்து மற்றோர் அரசாணை மன்னரால் பிறப்பிக்கப்பட்டது. கோபுரத்தின் வெளிப்புறத்தே காவலர் சிற்பங்கள் அமைந்தன. உட்பகுதியில் தெற்கிலும் வடக்கிலுமாய் 12

பெருந்தூண்கள் நிறுவி, ஒவ்வொரு தூணையும் பல சதுரங்களாக வரையறுத்த சிற்பிகள், ஒவ்வொரு சதுரத்திலும் அழகான சிற்பங்களைச் செதுக்கினர். சோழர் கால ஆடற்கோலங்கள், பூதங்களின் பல்வேறு அமர்வுகள், இறைவடிவங்கள் என அந்த 12 தூண்களில் அமைந்த 157 சிற்பங்களும் சோழர் கலைமுறைக்கும் சமயச் சிந்தனைகளுக்கும் சான்றுகளாயின.

உட்பகுதியின் மேற்புறத்தே வடக்கில் கங்காளரையும் தெற்கில் சிவபெருமான் உமை இணையையும் பெருஞ்சிற்பங்களாய்க் காட்டிய சிற்பிகள், தூண்களுக்கு இடைப்பட்ட ஈரடுக்கு மாளிகையைத் தங்கள் கற்பனை வளத்தால் செழுமையாக்கினர். பிற்காலச் சோழர் கால ஆடற்கலைப் பெருமை விளம்பும் இந்த மாளிகைச் சிற்பங்களும் இதை அலங்கரிக்கும் தூண்களின் வடிவமைப்பும் பார்ப்பவர் கண்களில் நிற்கும் சிறந்த கலை படைப்புகள் ஆகும்.

மூன்றாம் குலோத்துங்கனை அடுத்து வந்த மூன்றாம் ராஜராஜன் காலத்தில் பாண்டியர் எழுச்சி ஏற்பட்டது. ராஜராஜனுக்கு உதவ மைசூரிலிருந்து ஹொய்சள அரசர் படை வந்தது.

சோழ, பாண்டிய, ஹொய்சளப் படைகளுக்கிடையே சிக்கிய பைஞ்ஞீலியும், அதைச் சுற்றியிருந்த பாச்சில் கூற்றமும் பேரிழப்பைச் சந்தித்தன. இதனால் கோபுரப் பணி தடைபட்டது. குறைபணியாய் நின்ற இக்கோபுரத்தை முழுமையுறச் செய்ய வேண்டும் எனும் ஆவல், கி.பி.13ஆம் நூற்றாண்டின் இறுதியில், மாறவர்மன் குலசேகர பாண்டியன் 27ஆம் ஆட்சியாண்டில் பெருந்தீயாய் எழுந்தது.

தவப்பெருமாள் முதலியாண்டான் என்பார் கோபுரக் கட்டுமானப் பணிக்குப் பொறுப்பேற்றார். சித்ரமேழிப் பெரியநாட்டார் இவருக்கு துணையாக இருந்தார். நாட்டார் உறுப்பினர் ஒவ்வொருவரும் அவரவர் நிலங்களின் அளவுக்கேற்பப் பொருளோ, விளைபொருட்களோ அளிக்க முடிவாயிற்று. அந்தப் பெருங்கருணையால் கீழ்நிலை முற்றுப்பெற்று இரண்டாம் நிலை தொடங்கப் பெற்றாலும் கோபுரப்பணி முடிவடையவில்லை. திரிபுவனவீரேசுவரத்தினும் சிறப்பான படைப்பாக விளங்கியிருக்க வேண்டிய இந்தப் பைஞ்ஞீலிக் கோபுரம், பலமுறை முயன்றும் இரண்டாம் தளத்துடன் நிறைவடையாமல் நின்றது.

தொடர்ந்து நடைபெற்ற போர்களும், நிலையற்ற அரசியல் சூழல்களுமே இதற்கு காரணங்கள்.

கோபுரம் முற்றுப்பெறாது போனாலும், தான் வளர்ந்த காலத்தின் சமூகப் பண்பாட்டுப் படப்பிடிப்பாய் 12 தூண்களும் 157 சோழச் சிற்பங்களுமாய் எழுச்சியோடு நிற்கிறது. இந்தக் கோபுரத்தின் கதை நம் கண்களை நனைத்தாலும், இப்போது அது இருக்கும் நிலையிலும் கூட, அது கவிதையாகவே நம் உள்ளம் நிறைக்கிறது.

முனைவர் இரா. கலைக்கோவன்
வரலாற்றாய்வாளர்
தொடர்புக்கு: tkalaikkovan48@gmall.com

4. வரலாற்று ஆதாரங்களுடன் பாண்டியன் தலையாலங்கானத்து செருவென்ற நெடுஞ்செழியனின் காலம்

— முனைவர் ப பாண்டியராஜா

சங்க காலத்தில் தமிழகத்தை ஆண்ட மூவேந்தரும் கடல்வழி வாணிபத்தில் மிகச் சிறந்தவர்களாக விளங்கினர். அவருள் சோழருக்குக் காவிரிப்பூம்பட்டினம் என்னும் பூம்புகார் துறைமுகப்பட்டினமாக இருந்தது. இது காவிரி கடலிற் கலக்குமிடத்தில் இருந்தது. சேரருக்குத் தொண்டி, முசிறி என்ற இரு துறைமுகப்பட்டினங்கள் இருந்தன. இவை மேற்குக் கடற்கரைப்பகுதியில் இருந்தன.

பாண்டியருக்குக் கொற்கை துறைமுகப்பட்டினமாக இருந்தது. வைகை நதி கடலிற் சேருமிடத்தில் உள்ள அழகன்குளம் என்ற ஊரில் அண்மையில் நடந்த அகழ்வாய்வுகளில் ரோமானிய நாணயங்களும் மட்பாண்டங்களும் கிடைத்தன. எனவே அதுவும் பாண்டியரின் ஒரு துறைமுகப் பட்டினமாக இருந்திருக்க வேண்டும்.

இவை இரண்டுமே கிழக்குக் கடற்கரைப் பக்கம் இருக்கின்றன. இவற்றைத் தவிர பாண்டியருக்கு மேற்குக் கடற்கரைப் பக்கத்திலும் ஒரு கடற்கரைப் பட்டினம் இருந்திருக்கிறது. அதைப் பற்றிய ஆய்வுகளே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சங்க காலப் பாண்டியருள் மிகவும் புகழ்பெற்றவன் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் என்பவனாவான். இவன் இளவயதானவனாய் இருந்தபோதே, சேர சோழ மன்னரும், அவருடன் சேர்ந்து ஐந்து குறுநிலமன்னர்களுமாக எழுவர் இவனுடன் போர்தொடுத்தனர். அவர்களை முறியடித்து விரட்டிச் சென்று தலையாலங்கானம் என்ற இடத்தில் பெரும் போரிட்டு எழுவரையும் தோற்கடித்து, தமிழகம் முழுவதையும் ஒரு குடைக்கீழ்க் கொண்டுவந்து பேரரசனாக இவன் ஆண்டுவந்தான். அதன் பின் தன் முன்னோர் வாழ்ந்த சிறிய அரண்மனையை முழுதுமாக இடித்துவிட்டு, ஒரு பேரரசனுக்குரிய தகுதியை நிலைநாட்ட *'பெரும்பெயர் மன்னர்க்கு ஒப்ப மனை வகுத்து' (நெடு. 78)* ஒரு மிகப் பெரிய

மாளிகையைக் கட்டியதாக நெடுநல்வாடை கூறுகிறது.

இந்தப் பாண்டியன் நெடுஞ்செழியனின் சிறப்புகளை மதுரைப் புலவர் மாங்குடிமருதனார் மதுரைக் காஞ்சி என்ற தலைப்பில் ஒரு பெரும்பாடலாகப் பாடியுள்ளார். அதில் இப்பாண்டியன் பெற்ற போர்வெற்றிகளை வரிசையாகக் கூறுகின்றபோது, இவனது தலையாலங்கானத்துப் போர் வெற்றியினை இரண்டாவதாகவே புலவர் கூறுகிறார். இந்தப் போருக்கு முன்னர் சேரமன்னர்க்குரிய குட்டநாட்டுப் பகுதியில் பல குறுநிலமன்னர்களை இவன் வெற்றிகொண்டதாகப் புலவர் கூறுகிறார். (பல் குட்டுவர் வெல் கோவே — மது.105)

இதன் உச்சகட்டமாக அப்பகுதியில் இருந்த ஒரு கடற்கரைப் பட்டினத்தையும் இவன் கைப்பற்றியதாகப் புலவர் கூறுகிறார்.

பொன் மலிந்த விழுப்பண்டம்
நாடு ஆர நன்கு இழிதரும்
ஆடு இயல் பெரு நாவாய்
மழை முற்றிய மலை புரைய
துறை முற்றிய துளங்கு இருக்கை

தெண்கடல் குண்டு அகழி
சீர்சான்ற உயர் நெல்லின்
ஊர் கொண்ட உயர் கொற்றவ (மது. 81–88)

பொன் மிகுதற்குக் காரணமான சீரிய
சரக்குகளை
நாட்டிலுள்ளோர் நுகரும்படி நன்றாக
இறக்குதலைச் செய்யும்
அசையும் இயல்பினையுடைய பெரிய
மரக்கலங்கள் –
மேகங்கள் சூழ்ந்த மலையைப் போல
துறைகள் சூழ்ந்த – அசைகின்ற
இருக்கையினையும், 85
தெளிந்த கடலாகிய ஆழ்ந்த அகழியினையும்,
சிறப்புக்கள் அமைந்த உயர்ந்த நெல்லின்
(பெயரைப்பெற்ற)
ஊரைக் கொண்ட உயர்ந்த வெற்றியை
உடையவனே –

இது இப்பாண்டியன் பெற்ற முதல் வெற்றியாகும். இந்த ஊர் கடற்கரைப் பட்டினமாயினும் வயல்வெளிகள் நிறைந்த ஊர் என்றும் இந்த வெற்றியைக் கொண்டாடப் பாண்டியன் அங்கேயே போர்முனையில் வெற்றியைப் பாடும் பொருநருக்குப் பெரும் களிறுகளை வழங்கித்

தலையில் பொற்றாமரையையும் சூடினான் என்று மதுரைக் காஞ்சி கூறுகிறது (89 — 105).

எனவே இது பாண்டியனின் மிகச் சிறப்பான வெற்றிகளுள் ஒன்று என்பதில் ஐயமில்லை. சங்ககாலத்தில் பொனீசியரும், பாரசீகத்தாரும், எகிப்தியரும், கிரேக்கரும் ரோமரும் மேலை நாடுகளிலிருந்து கடல்வழியாக தமிழகத்து மேற்குக் கடற்கரையில் வந்திறங்கினர். தமிழ் இலக்கியங்கள் இவர்களைப் பொதுவாக யவனர்கள் என்று குறிக்கிறது. தமிழகத்தில் கிடைக்கும் முத்து, விலையுயர்ந்த கற்கள், மயிலிறகு போன்றவற்றையும், மிளகு, லவங்கம் போன்ற வாசனைப்பொருள்களையும் ஏற்றிக்கொண்டுபோக இவர்கள் கப்பலில் வந்து மேற்குக் கடற்கரையில் இறங்கி, உள்நாடுகளுக்கு வந்து வணிகம் செய்ததாக வரலாறு கூறுகிறது. தமிழகப் பொருள்களை வாங்க அவர்கள் தங்கள் நாட்டிலிருந்து பெருமளவு தங்கத்தைக் கொண்டுவந்தார்கள் என்றும் அறிகிறோம்.

இதனையே *‘பொன் மலிந்த விழுப்பண்டம் நாடு ஆர நன்கு இழிதரு’*–வதாகப் புலவர் பாடுகிறார். இந்த ஊரின் பெயரை நேரிடையாகக் கூறாமல்

புலவர் நெல்லின் ஊர் என்று கூறுகிறார். இதனை நெல்லூர் என்றும் சாலியூர் என்றும் உரைகாரர்கள் கூறுவர். இருப்பினும் அது எங்குளது என்று கண்டறியமுடியவில்லை.

தமிழகத்தின் தொன்மைச் சான்றுக்குப் பல புறச்சான்றுகள் உள்ளன. அவற்றுள் தமிழகத்தைப் பற்றி மேனாட்டு வரலாற்றாசிரியர்கள், பயணநூலாசிரியர்கள் போன்றோர் எழுதிவைத்துள்ள குறிப்புகள் முக்கியமானவை.

மெகஸ்தனீசின் (கி.மு 350 — கி.மு 290) இண்டிகா என்னும் நூலில் தற்போது கிடைக்கும் பகுதிகளில் தமிழகத்தைப் பற்றிய செய்திகள் வெகுவாக இல்லை. மெகஸ்தனிஸ் மதுரைக்கு வந்திருந்தார் என்ற செய்திக்குச் சான்றுகள் இல்லை. ஆனால் அவரை அடுத்து ஸ்ட்ராபோ (Strabo) என்ற கிரேக்க வரலாற்றாசிரியர் (கி.மு 64 — கி.பி 24) தன்னுடைய ஜியாக்ரபிகா (Geographica) என்ற நூலில் பாண்டியன் அல்லது போரஸ் என்ற ஒரு இந்திய மன்னன் அகஸ்டஸ் சீசர் (கி.மு 63 — கி.பி 14) என்ற ரோமப்பேரரசனுக்கு ஒரு தூதுவனை அனுப்பினான் என்ற செய்தியைத்

தெரிவிக்கிறார். ஃப்லோரஸ் (Florus) என்ற மற்றொரு வரலாற்றாசிரியர் சூரியனுக்கு நேர் கீழே வசிக்கும் இந்தியர்கள் முத்துக்களையும், விலையுயர்ந்த கற்களையும் அகஸ்டஸ் பேரரசனுக்குப் பரிசாக அனுப்பினர் என்று தன் நூலில் (The Epitome of Roman History) குறிப்பிடுகிறார். எனவே அந்த மன்னன் ஒரு பாண்டிய அரசனே என்பது தெளிவாகிறது.

ஆதாரம் – குறிப்பு – 1

The Geography of Strabo. (Literally translated, with notes, in three volumes. London. George Bell & Sons. 1903)

2. ஸ்ட்ராபோ (Strabo : 64 BC – 24 AD)
Book 15, Chapter 1:

Very few of the merchants who now sail from Egypt by the Nile and the Arabian Gulf to India have proceeded as far as the Ganges; and, being ignorant persons, were not qualified to give an account of places they have visited. From one place in India, and from one king, namely, Pandion, or, according to others, 5 Porus, presents

and embassies were sent to Augustus Caesar. With the ambassadors came the Indian Gymno–Sophist, who committed himself to the flames at Athens, like Calanus, who exhibited the same spectacle in the presence of Alexander .

இங்கே ஸ்ட்ராபோ குறிப்பிடும் மன்னன் தென்னாட்டுப் பாண்டியன்தானா என்ற ஐயம் எழுப்பப்படுகிறது. இங்கே Pandion, or, according to others, 5 Porus என்று கிரேக்கத்தில் எழுதப்பட்ட தொடர் பல்வேறுவிதமாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அத்தொடர் இதுதான்: 5. ἢ κατ᾽ ἄλλους for καὶ ἄλλου. —Groskurd. ஃப்லோரஸ் (Florus) என்ற மற்றொரு வரலாற்றாசிரியர் தன்னுடைய நூலான "The Epitome of Roman History" என்பதில் இதே தூதனைப் பற்றிக் குறிப்பிடுகிறார். சூரியனுக்கு நேர் கீழே வசிக்கும் இந்தியர்களிடமிருந்து பரிசுப்பொருள்களுடன் தூதன் சக்கரவர்த்தியக் காண வந்தான் என்று குறிப்பிடுகிறார். அவர் கூறுவது இதுதான்:

For the Scythians and the Sarmatians sent ambassadors seeking friendship; the Seres4 too and the Indians, who live immediately beneath

the sun, though they brought elephants amongst their gifts as well as precious stones and pearls, regarded their long journey, in the accomplishment of which they had spent four years, as the greatest tribute which they rendered; and indeed their complexion proved that they came from beneath another sky (available in internet: http://penelope.uchicago.edu/Thayer/E/Roman/Texts/Florus/Epitome/home.html)

எனவே ஸ்ட்ராபோ குறிப்பிடும் இந்தியத்தூதன் தென்னாட்டுப் பாண்டிய மன்னனால் அனுப்பப்பட்டவனே என்பது உறுதியாகிறது. இவன் நம்முடைய தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனே என்று நம்ப இடமிருக்கிறது. இதைப் பின்னர்க் காண்போம்.

அடுத்து, பெரிப்ளூஸ் (Periplus) என்ற ஒரு பயணநூல் பாண்டியர்களைப் பற்றிப் பேசுகிறது.

இந்த நூலை எழுதியவர் யார் எனத் தெரியவில்லை. இது எழுதப்பட்ட காலமும் சரியாகத் தெரியவில்லை. எனினும் இதன் காலம் கி.பி 40 அல்லது 50 க்குள் இருக்கலாம் என

அறிஞர்கள் கருதுகின்றனர். இந்த நூல் தமிழக மேற்குக் கடற்கரையில் அன்றிருந்த முக்கிய துறைமுகப் பட்டினங்களைப் பற்றிய தகவல்களைக் கொண்டுள்ளது. இதில் தொண்டி, முசிறி ஆகிய சேரர் துறைமுகப் பட்டினங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

முசிறிக்குச் சற்றுத் தெற்கில் சுமர் 100 கி.மீ தொலைவில் உள்ள ஓர் ஆற்றின் உட்பகுதியில் நெல்கின்டா (Nelcynda or Nelkynda) என்று அழைக்கப்படும் ஒரு துறைமுகப்பட்டினம் இருந்ததாகவும், அது உள்நாட்டில் வெகுதொலைவில் உள்ள மதுரை என்ற நகரை ஆளும் பாண்டியன் என்றொரு மன்னனின் கட்டுப்பாட்டில் இருந்ததாகவும் பெரிப்ளூஸ் கூறுவது கூர்ந்து நோக்கத்தக்கது. மேலும் தொண்டி முசிறி ஆகிய துறைமுகங்களுக்கருகே கடற்கொள்ளைக்காரரின் ஆபத்து நேரக்கூடும் என்றும், நெல்கின்டா மிகவும் பாதுகாப்பானது என்றும் அந்நூல் கூறுகிறது.

ஆதாரம் – குறிப்பு – 2

செங்கடலை அடுத்த பயணம் (Periplus of the Erythraean Sea — The Voyage around the Erythraean Sea — AD 40 – 50)

இந்நூல் 66 பத்திகளை (Paragraph)க் கொண்டது. 54–ஆம் பத்தியில் நெல்கின்டா, பாண்டியன் பற்றிய குறிப்புகள் உள்ளன.

54. Tyndis is of the Kingdom of Cerobothra; it is a village in plain sight by the sea. Muziris, of the same Kingdom, abounds in ships sent there with cargoes from Arabia, and by the Greeks; it is located on a river, distant from Tyndis by river and sea five hundred stadia, and up the river from the shore twenty stadia. Nelcynda is distant from Muziris by river and sea about five hundred stadia, and is of another Kingdom, the Pandian. This place is also situated on a river, about one hundred and twenty stadia from the sea.

பெரிப்ளூசை அடுத்து தமிழகத்தைப் பற்றிய தகவல் தெரிவிப்பவர் மூத்த பிளினி (Plini the Elder) (கி.பி.23 — கி.பி 79) என்ற உரோம வரலாற்றாசிரியர். இவர் தன்னுடைய இயற்கை வரலாறு (Natural History) என்ற நூலில்

நெல்கின்டா, மதுரை, பாண்டியன் ஆகிய பெயர்களைக் குறிப்பிட்டு பெரிப்ளூஸ் கூறும் செய்திகளை உறுதிப்படுத்துக்கிறார்.

ஆதாரம் – குறிப்பு – 3

Pliny the Elder 4. மூத்த பிளினி (Pliny the Elder – Gaius Plinius Secundus) (கி.பி. 23 – கி.பி. 79)

The Natural History (Naturalis Historia)
BOOK VI. c. 23 (26).

If the wind called Hippalus be blowing, Muziris, the nearest mart of India, can be reached in forty days. It is not a desirable place of call, pirates being in the neighbourhood who occupy a place called Nitrias, and besides it is not well supplied with wares for traffic. Ships besides anchor at a great distance from the shore, and the cargoes have to be landed and shipped by employing boats. At the time I was writing this Caelobothras was the sovereign of that country.

Another more convenient harbour of the nation is Neacyndon which is called Becare. There

Pandion used to reign, dwelling at a great distance from the mart, in a town in the interior of the country called Modura. The district from which pepper is carried down to Becare in canoes is called Cottonara. None of these names of nations, ports, and cities are to be found in any of the former writers––from which it appears that the names (stations) of the places are changed. (available in internet: http://www.sdstate.edu/projectsouthasia/upload/Pliny–Voyages–to–India.pdf – South Dakota State University, Brookings, SD 57007)

வேறு யாரும் இதுவரை இந்தப் பெயர்களைக் குறிப்பிடவில்லை என்கிறார் பிளினி. ஆனால் இவருக்கும் பின் வந்த தாலமி (கி.பி 90 – கி.பி 168) என்ற கிரேக்க வரலாற்றாசிரியர் தன்னுடைய ஜியாக்ரபிகா என்ற நூலில் நெல்கின்டா என்ற இந்த ஊர் ஆய் அரசர்களின் கட்டுப்பாட்டில் இருந்ததாகக் கூறுகிறார். இந்த ஆய் அரசர்கள் பொதிகைமலைப் பகுதியை ஆண்டவர்கள் எனத் தெரிகிறது. எனவே பொதிமலைப் பகுதியில் மேற்குமலைத் தொடரை ஊடுறுவிக்கொண்டு மேற்குக் கடற்கரைப் பட்டினமான நெல்கின்டாவுக்கு ஒரு வணிகப்

பாதை இருந்திருக்கவேண்டும் என்பது தெளிவாகிறது. நெல்கின்டாவில் இறக்குமதியான மேலைநாட்டுப் பொருள்கள் இந்த வழியாகப் பாண்டிய நாட்டுக்கு வந்தன என்றும், பாண்டியநாட்டுப் பொருள்கள் இந்த வழியாக மேலைநாடுகளுக்கு ஏற்றுமதி ஆயின என்றும் கூறலாம்.

ஆதாரம் – குறிப்பு – 4

Geographia – தாலமி (Ptolemy கி.பி. 90 – கி.பி. 168)

(ஆய் என்பனின் நாடு என்பதின் கீழ் மெல்கின்டா (நெல்கின்டா) குறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். – பார்க்க : படம்)

9. Country of the Aïoi.

Melkynda	120° 20′	14° 20′
Elangkon (or Elangkôr), a mart	120° 40′	14°
Kottiara, the metropolis	121°	14°
Bammala	121° 20′	14° 15′
Komaria, a cape and town	121° 45	13° 30′

இப்பொழுது மீண்டும் மதுரைக்காஞ்சிக்கு வருவோம். நெடுஞ்செழியன் வெற்றி கொண்ட நெல்லின் ஊர் என்பது முதலில் ஒரு மேற்குக் கடற்கரைப் பட்டினமாகவே இருக்கவேண்டும்.

அது ஒரு கடற்கரைப் பட்டினம் என்பதைப் பாடலே கூறுகிறது. அது கொற்கையாகவோ, அழகன்குளமாகவோ இருக்கமுடியாது. கொற்கைப் பட்டினம் சிலவேளைகளில் தென்பாண்டி மன்னரின் கட்டுப்பாட்டில் இருந்திருப்பினும், இதே பாடலில் பின்னர் புலவர் 'நல் கொற்கையோர் நசைப் பொருந' (மது.138) என்று கூறுவதால் முதலில் கூறப்பட்டது கொற்கை அல்ல என்பது தெளிவு. மேலும் அது நெல்லுக்குப் பெயர்போனதும் அல்ல. அடுத்து அழகன்குளம் என்பது இன்றைய இராமநாதபுரப்பகுதி.

அது என்றைக்குமே பாண்டியர் வசமே இருந்துள்ளது. எனவே அதனை வெல்லவேண்டிய நிலை பாண்டியனுக்கு இல்லை. எனவே அந்த நெல்லின் ஊர் வேறு ஒரு மன்னரின் ஆளுகைக்குட்பட்டிருந்து, பாண்டியன் அரசேற்றவுடன் முதலில் அதனைக் கைப்பற்றியிருக்கவேண்டும். இந்த நெல்லின் ஊரே மேற்குக்கடற்கரைப் பகுதியில் பாண்டியர் ஆளுகைக்குட்பட்ட பகுதி என யவன ஆசிரியர்களால் கூறப்படும் நெல்கின்டா என்பது உறுதியாகிறது.

யவன ஆசிரியர்கள் குறிப்பிடும் நெல்கின்டா என்ற இந்த இடம், இன்றைய கேரளாவில் திருவல்லாவைச் சேர்ந்த ஆளும்துருத்தி — கடப்பரா பகுதியில் இருந்ததாக அங்கு நடந்த அகழ்வாய்வுகள் கூறுகின்றன. அந்த இடம் இன்றைக்கும் மிகுந்த நெல்வளம் மிக்க பகுதியாக விளங்குவது கவனிக்கத் தக்கது. இந்த இடம் பம்பா நதிக் கரையில் இருப்பது வராற்றாசிரியரின் கூற்றை மெய்ப்பிப்பதாகவே உள்ளது. மேலும் இந்த இடம் பொதிகை மலைக்கு மேற்கில் அமைந்திருப்பது நமது ஊகங்களை உறுதிப்படுத்துகிறது.

ஆதாரம் — குறிப்பு — 5

The major occupation in Kuttanadu (in Kerala) is farming, with rice the most important agricultural product. This activity gives the area its moniker of "The Rice Bowl of Kerala". Three crops are grown every year now instead of the traditional practice of two crops per year. https://en.wikipedia.org/wiki/Kuttanad

இதன்மூலம் பாண்டியனுக்கு இரண்டு நன்மைகள் விளைகின்றன. முதலில் இது நெல்வளம் மிக்க

ஊர். எனவே வடகிழக்குப் பருவமழை பொய்த்து வைகை வறண்ட காலங்களிலும், மேற்குமலைப் பகுதியில் இருக்கும் இந்த வளமிக்க சமவெளியில் விளையும் நெல் பாண்டிய நாட்டு மக்களுக்கு உணவாகும் அன்றோ! புலவர் 'பல்குட்டுவர் வெல் கோவே' (மது.105) என்று பாண்டியனைச் சிறப்பித்துக்கூறியதைப் பார்த்தோம்.

குட்டநாட்டை ஆண்டவரே குட்டுவர் எனப்பட்டனர் என்பர் உரையாசிரியர். இந்தக் குட்டநாடு இன்றைய கோட்டயம், கொல்லம் மாவட்டங்களை அடக்கிய பகுதியாகும். அகழ்வாராய்வு செய்யப்பட்ட ஆளும்துருத்தி – கடப்பரா பகுதி இந்த வட்டாரத்தைச் சேர்ந்தது என்பதுவும் கவனிக்கத் தகுந்தது.

மேலும் மேலைக் கடற்கரையில் இருக்கும் இந்த பட்டினம் மேலை நாடுகளுடன் நேரடியாகவும், எளிதாகவும் கடல்வழி வாணிகம் செய்ய ஒரு வாயிலாகவும் விளங்கும் அன்றோ! இதனை உறுதிப்படுத்தவே பாண்டியன் அங்கு வலிமையான படைகளை நிறுத்தி, கடற்கொள்ளையர்களை விரட்டியடித்தான் எனலாம். எனவே இதனைப் பாண்டியனின்

மேற்கு வாயில் என்ற பொருளில் பாண்டியநாட்டுக் குடவாயில் என்றும் கூறலாம்.

மிகுந்த நெல்வளம் கொண்ட காரணத்தால் இந்த இடம் நெற்குன்றம் என்று அன்றைக்கு அழைக்கப்பட்டிருக்கலாம். இதனையே யவன ஆசிரியர்கள் நெல்கின்டா என்று அழைத்தனர் என்றும் கூறலாம். எனவேதான் நெடுஞ்செழியன் பதவிக்கு வந்தவுடன் முதல்வேலையாக இந்த மேற்குக் கடற்கரைப் பட்டினத்தைக் கைப்பற்றுகிறான்.

அதன்மூலம் சேர மன்னனிடம் ஏற்பட்ட பகை பெரிதாகி, ஏழு மன்னர்களும் சேர்ந்து இவனை எதிர்க்க முற்படுகின்றனர். அவர்களை முற்றிலும் தோற்கடித்து தமிழக முழுமைக்கும் ஒரே பேரரசனாக (மகா சக்கரவர்த்தி) முடிசூடிக்கொண்ட பின்னர், தன் தகுதிக்கேற்ப பெரிய அரண்மனையைக் கட்டியதுமில்லாமல், அப்போது ரோமானியப் பேரரசனாக ஆன அகஸ்டஸ் சீசருக்கும் தமிழகத்தின் சார்பில் வாழ்த்துத் தெரிவிக்க ஒரு தூதனை அனுப்பினான் என்று நம்ப இடமிருக்கிறது.

இதன் மூலம் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் கிறிஸ்து பிறப்பையொட்டிய காலத்தில், அதாவது மூத்த பிளினியின் காலத்தில் (கி.பி. 23 – கி.பி. 79) தமிழகத்தில் ஆண்டான் என்றும் கூற முடிகிறது.

– முனைவர் ப. பாண்டியராஜா

5. சிகை கொற்றன்

— அருள் மெர்வின்

“சிகை கொற்றன் வர கண்ட” என்று எகிப்து பிரமிடில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழில் எழுதப்பட்டிருப்பதாக வெளிநாட்டுக்காரர்கள் கண்டுபிடித்துச் சொல்லியிருக்கிறார்கள்.

இந்த சொற்றொடரை வாசித்ததும் சங்க இலக்கியங்களை வாசிப்பவர்களுக்கு உடனே எங்கேயோ கேட்ட மாதிரி இருக்கும். ஏனென்றால், இந்த நான்கு சொற்களுமே சங்க

இலக்கியச் சொற்கள். இதில் வரும் 'கொற்றன்' என்பவர் ஏதோ அரசன், வணிகக் குழுத் தலைவன் என்ற அர்த்தத்தில் மட்டுமே நம்மூரில் ஆம்னி பஸ் ஓட்டும் ஆராய்ச்சியாளர்கள் செய்திகளில் எழுதிவருகிறார்கள்.

இடையன் சேந்தன் 'கொற்றனார்', உமட்டூர் கிழார் மகனார் 'கொற்றனார்', உறையூர் இளம்பொன் வணிகன் சாத்தன் 'கொற்றனார்', கச்சிப்பேட்டுக் காஞ்சிக் 'கொற்றனார்', கண்ணகாரன் 'கொற்றனார்', கண்ணங் 'கொற்றனார்', கிடங்கில் காவிதிப் பெரும் 'கொற்றனார்', கொற்றம் 'கொற்றனார்', கோழிக் 'கொற்றனார்', செயலூர் இளம்பொன் சாத்தன் 'கொற்றனார்', செல்லூர் இளம்பொன் சாத்தன் 'கொற்றனார்', செல்லூர் கிழார் மகனார் பெரும்பூதங்'கொற்றனார்', முடக் 'கொற்றனார்', துறைக்குறுமாவின் பாலம் 'கொற்றனார்', நற்றங் 'கொற்றனார்', படுமரத்து மோசி 'கொற்றனார்', பறநாட்டுப் பெருங்'கொற்றனார்', புறநாட்டுப் பெருங்'கொற்றனார்', மதுரை ஆசிரியர் கோடங்'கொற்றனார்', மதுரைப் பாலாசிரியர் சேந்தன் 'கொற்றனார்', மாற்றூர் கிழார் மகனார் கொற்றம் 'கொற்றனார்', முது'கொற்றனார்', மோசி 'கொற்றனார்', வெண்'கொற்றனார்'...

மேலே உள்ளவர்களெல்லாம் சங்க இலக்கியப் புலவர்கள். இத்தனை கொற்றன்கள் சங்க இலக்கியங்களில் பாடல்கள் எழுதியிருக்கிறார்கள். இவர்கள் பெயர்களுக்கு முன்னால் வரும் அடைமொழிகளைக் கவனித்தால் இவர்களில் பலர் அரசர்களோ தலைவர்களோ இல்லை என்பது தெரிய வரும். சிக்கல் என்னவென்றால் அத்தனை கொற்றனார்களும் அகப் பாடல்களை, காதல் பாடல்களை மட்டுமே எழுதியிருக்கிறார்கள். அதனால்தான் பள்ளிக்கூடங்களில் இவர்கள் பெயர்களைக் கேள்விப்பட்டிருக்க மாட்டீர்கள். பள்ளிகளில் சென்சார் செய்யப்பட்ட பாடல்களை எழுதிய ஒருவர் பிரமிடு வரைச் சென்று எழுதியிருக்கலாம்.

கோழிக் கொற்றனார் (கூழிக் கொற்றன், கூளிக் கொற்றன் – வெவ்வேறு ஓலைப்பிரதிகளில் இவரது பெயர் இப்படியெல்லாம் உள்ளது) என்பவர் குறுந்தொகையில் எழுதியிருக்கும் ஒரே ஒரு பாடலை வாசித்தால் அவர் எகிப்து நாட்டு கிளியோபட்ராவிடமோ, நெஃபர்டிடியிடமோ மயங்கி எழுதியது மாதிரியே இருக்கும்.

மூங்கிலைப் போலத் தோள்களையுடைய ஒரு பெண்ணுக்காக சிலையைச் செய்து வைத்திருப்பதையும் (‘குறுமகள் பாவை’), அதைச் சுற்றிப் பஞ்சாய்ப் பள்ளம் சூழ்ந்து இருப்பதையும் (‘பஞ்சாய்ப் பள்ளம் சூழ்ந்தும்’), அவளை நான் காதலிக்கிறேன் என்று அந்த ஊர் அரசனிடம் சொன்னால் அவன் என்ன நினைப்பானோ (‘முறையுடை யரசன் செங்கோல் அவையத் தியான்றற் கடவின் யாங்கா வதுகொல்’) என்றெல்லாம் எழுதியிருக்கிறார். கடைசியில், ‘பேதை மன்ற அளிதோதானே இவ்வழுங்கல் ஊரே’ என்று அந்த ஊரைப் பற்றி எழுதி முடிக்கிறார். பேதைமையையுடைய, இரங்கத்தக்க, ஆரவாரமுடைய ஊர் இந்த ஊர் என்று தான் புதிதாகப் பார்த்த ஓர் ஊரைப்பற்றிப் பாடல் எழுதியிருக்கிறார் (குறுந்தொகை 276). சங்க இலக்கியங்கள் எழுதப்பட்டு ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு உரை எழுதியவர்கள் இது போன்ற பாடல்களை ஏதோ தலைவன்–தலைவி–தோழி பாடல் என்று கடந்து போயிருக்கிறார்கள்.

‘சிகை’ என்பதும் சங்க இலக்கியச் சொல். இந்த பிரமிடுத் தமிழ் செய்தி பற்றிய கட்டுரைகளில் சிலர் எழுதியிருப்பது போல் இது வடமொழிச்

சொல்லான குடுமி அல்ல. ‘சிகை’ என்றால் பழந்தமிழில் வேறு பல அர்த்தங்கள் உள்ளன. ‘சிகை’ என்றால் ‘எஞ்சியிருந்த’ என்ற ஓர் அர்த்தமும் உள்ளது. ‘சிகை கிடந்த ஊடல்’ என்ற பரிபாடல் சொற்றொடருக்கு அர்த்தம் ‘மீதியிருந்த ஊடல்’!

‘வர கண்ட’ என்றால் கேட்கவே வேண்டாம். ‘வர காண்போர்’ என்பது குறுந்தொகைச் சொற்றொடர்.

“பொருட்பிணிப் போகிப் பிரிந்து உறை காதலர் வரக் காண்போரே”, குறுங்குடி மருதன் என்ற புலவர் எழுதியது (குறுந்தொகை 344). பொருளைத் தேடி அலைவது ஒரு பிணி அதாவது நோய். அதனால் உறவுகளை இழப்போம், காதலை இழப்போம். அந்த பொருட்பிணிப் போய் (பொருட்பிணிப் போகி) பிரிந்து வாழும் (பிரிந்து உறை) காதலன் திரும்பி வரக் காண்போரே... என்பதாக அர்த்தம்.

“சிகை கொற்றன் வர கண்ட” என்பது அல்டிமேட் அக இலக்கியச் சொற்றொடர். சங்க காலக் காதலன் ஒருவன் தன் காதலிக்காக பிரமிடுச்

சுவரில் எழுதிய சொற்றொடர். சந்தேகம் இருந்தால் எழுதியவரையே கேட்டுப் பாருங்கள்.

(பிரமிடு மற்றும் அன்டார்டிகாவில் தமிழ்ச் சொற்கள் தென்பட்டால் அவற்றை சங்க இலக்கியத்தில் தேட... முனைவர் பாண்டியராஜாவின் tamilconcordance.in)

6. கண்ணகி கோவிலும் வைகைப் பெருவெளியும்: நூல் விமர்சனம்

— முனைவர் க. சுபாஷிணி



தமிழ் பண்பாட்டில் முக்கியத்துவம் பெறும் தொன்மை வழிபாட்டில் கண்ணகி வழிபாடு மிக

முக்கியத்துவம் பெறும் ஒன்று. தாய் தெய்வ வழிபாட்டையே தங்கள் பண்டைய வழிபாட்டு நெறியாகக் கொண்டிருந்த தமிழ் மக்களின் வாழ்வியல் நெறியில் கொற்றவை, காளி, மற்றும் கேரளத்தில் முக்கியத்துவம் பெறும் பகவதி அம்மன், ஈழத்தில் முக்கியத்துவம் பெறும் கண்ணகை வழிபாடு என்பவை தாய்தெய்வ வழிபாட்டின் தொடர்ச்சியைச் சான்று பகர்கின்றன. கண்ணகி இலக்கியத்தின் ஊடாக நமக்கு அறிமுகம் பெறுவது சிலப்பதிகாரத்தின் வழியாக என்றாலும்கூட, வாய்மொழி இலக்கியங்கள் என்ற அடிப்படையில் நாட்டார் இலக்கியங்களாகும் கண்ணகியின் கதை தமிழ் சமூகத்தில் ஊடுருவி ஆழப் புதைந்துள்ளது. கண்ணகியின் வாழ்க்கையின் வெவ்வேறு படிநிலைகளை விவரிக்கும் பல்வேறு நூல்கள் வந்திருக்கும் சூழலில், மதுரை மாநகரில் கொலையுண்ட தன் கணவனுக்காகப் பாண்டிய மன்னனின் அவையில் நீதி கேட்டு, பின்னர் தன் கோபம் குறையாது நகரத்தை எரித்து, அங்கிருந்து புறப்பட்டு 14 நாட்கள் கடந்து ஒரு குன்றுப் பகுதிக்கு வந்து கண்ணகி தன் உயிர் நீத்த பகுதி எது, என்பதை ஆராயும் வகையில் வெளிவந்திருக்கும் நூல் ஆய்வாளர் பாவெல்

பாரதி எழுதியிருக்கும் "கண்ணகி கோவில் வைகை பெருவெளியும்".

நூலின் முதல் பகுதி, சிலப்பதிகாரத்தின் மதுரை காண்டம் கூறும் 'நெடுவேள் குன்றம்' என்பது எங்கு உள்ளது, என்பதை ஆராய்கின்றது. நூலாசிரியர் இத்துறையில் இதுகாறும் முன்னோடிகளாக ஆய்வுசெய்த தொ.மு. சி.ரகுநாதன், இராகவையங்கார், கே முத்தையா, புலவர் சி கோவிந்தராசன் போன்றோரது ஆய்வுகளை ஆய்ந்து அலசி தனது கருத்துக்களையும் சேர்த்து 'நெடுவேள் குன்றம்' எங்கு இருக்கின்றது என்பதை தனது களப்பணிகளின் வழியாகவும், நூலாய்வுகளின் துணையுடனும் உறுதி செய்கிறார்.

நூலின் இரண்டாவது பகுதியானது, முதல் பகுதியில் உறுதி செய்யப்பட்ட நெடுவேள் குன்றத்தில் உள்ள மங்கலாதேவி கோட்டத்தை ஆராய்கிறது. தேனி மாவட்டம், கூடலூர் அருகே வனப்பகுதியில் கேரளாவிற்கும் தமிழ்நாட்டிற்கும் எல்லையில் அமைந்திருக்கும் வேங்கை கானல் மலைமுகட்டில் உள்ள மங்கலதேவி கோட்டமே 'கண்ணகி கோட்டம்' என்பதை குறிப்பிட்டு, சிதிலமடைந்திருக்கும் இக்கோவிலில் உள்ள 9 கல்வெட்டுகளைப் பற்றிய தகவல்களைக் கூறுகிறது.

இந்தக் கோவிலில் இரண்டடி உயரம் உள்ள பெண் தெய்வச் சிலை ஒன்று கிடைத்ததாகவும், ஆனால் தற்சமயம் இந்தச் சிலை அங்கு இல்லை என்ற செய்தியையும் நூலாசிரியர் பதிகின்றார். இது மிகுந்த அதிர்ச்சி அளிக்கும் ஒரு செய்தியாகும்.

இக்கோயில் கல்வெட்டுக்கள் இராசராச சோழன் காலத்திலும், பின்னர் பாண்டிய மன்னன் ஸ்ரீ குலசேகர பாண்டியன் காலத்தில் விரிவாக்கம் செய்யப்பட்ட போது செதுக்கப்பட்ட கல்வெட்டுகளாகும். இந்தக் கல்வெட்டுகள்

மங்கல மடந்தை கண்ணகியை 'ஸ்ரீ பூரணி' என்று குறிப்பிடுகின்றன என்பதைக் காணும்போது, வைதீக சமயத்தின் தாக்கம் இக்காலகட்டத்தில் வழக்கிலிருந்தமையினால் தமிழ் பெயரிலிருந்து சமஸ்கிருத பெயருக்குக் கண்ணகி தெய்வத்தின் பெயர் மாறிய நிலையைக் காண முடிகிறது.

தமிழகத்தில் தோன்றி நிலைபெற்ற கண்ணகி வழிபாடு இலங்கையில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் முக்கியத்துவம் பெறும் வழிபாடாக அமைந்திருக்கின்றது. இலங்கை மலையகப் பகுதிகளிலும் கண்ணகி கூத்து வழக்கிலுள்ளது. யாழ்ப்பாணத்தில் மட்டும் கண்ணகிக்கு 75 கோயில்களும், மட்டக்களப்பில் 30 கோயில்களும் உள்ளன என்பதை நூலாசிரியர் குறிப்பிடுகிறார். தமிழ் மரபு அறக்கட்டளையின் அண்மைய பதிவான தொல்லியல் அறிஞர் மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழக வரலாற்றுப் புலத்தின் தலைவர் பேராசிரியர் புஸ்பரட்ணம் அவர்களது கண்ணகி தொன்மம் பற்றிய பேட்டியில், கண்ணகி வழிபாடு இலங்கையில் பெறுகின்ற முக்கியத்துவம் பற்றி அவரது விளக்கங்கள் கருத்தில் கொள்ளப்பட வேண்டியவை.

நூலின் மூன்றாவது பகுதி முக்கியத்துவம் பெறுகிறது. இப்பகுதியில் நூலாசிரியர் மதுரையில் தொடங்கி, நெடுவேள் குன்றம் வரை காணப்படும் கண்ணகி தொன்மத்தின் தடயங்களை ஒவ்வொன்றாக பட்டியலிட்டு அவை ஒவ்வொன்றையும் விரிவாக விளக்குகின்றார். செல்லத்தம்மன் கோயில் கண்ணகி சிலை, கோவலன் கொலையுண்டதாகக் கருதப்படும் கோவலன் பொட்டல் மேடு, விராட்டிபத்து திரும்பிப்பார்த்த அம்மன் கோயில், குன்னுவரன்கோட்டை கண்ணகி பாலம், குள்ளப்புரம் மருத காளி கோயில், கம்பம் சாமுண்டிபுரம் சாமுண்டி அம்மன் கோயில் என ஒவ்வொன்றும் கண்ணகியின் துன்பத்திற்குச் சான்று பகரும் அடையாளங்களாக அமைந்திருப்பதை ஆசிரியரின் விரிவான விளக்கம் உறுதி செய்கிறது.

பழந்தமிழர்களின் தாய்த் தெய்வக் கோயில்களான அம்மன் கோயில்கள் மிகப் பெரும்பாலும் வடக்கு நோக்கியே அமைந்திருப்பதன் காரணம், தமிழகம் முப்புறமும் கடல் சூழ்ந்த நாடாகவே இருக்கும் சூழலில், எதிரிகளின் படைகள் வட திசையிலிருந்து மட்டுமே வர முடியும் என்பதால், காக்கும்

தெய்வமாகிய கொற்றவை தன் மக்களைக் காக்க ஆயுதம் ஏந்தி வடதிசை நோக்கி நிற்கும் வகையில் கோயில்கள் கட்டப்பட்டன என்ற செய்தியை நூல் பதிகின்றது.

கண்ணகி, வைகையின் வடகரை ஓரமாகவே 14 நாட்கள் நடந்து சென்று தன் உயிரை நீத்தார் என்பதைக் கூறும் வகையில் வைகை நதியின் சிற்றூர்கள் ஒவ்வொன்றின் பெயர்களும் நூலில் குறிப்பிடப்படுகின்றன.

நூலின் நான்காம் பகுதி நாட்டார் கதை மரபில் கண்ணகி தொன்மம் வெவ்வேறு கதை படிமங்களாக உருமாற்றம் பெற்றிருக்கும் செய்தியைக் கூறுகிறது. இதே பகுதி கண்ணகிக்கு வடமொழி மூலத்தைக் கற்பிக்க 'திருமாவுண்ணி' என வலம்வரும் திரிபை பற்றியும், ஈழத்தில் கண்ணகி 'கண்ணகை அம்மன்' என்று அழைக்கப்படுகின்றார் என்பதையும் குறிப்பிடுகிறது. தமிழகத்தில் வழக்கிலுள்ள கண்ணகி தொன்மம் பற்றிய சில கதைகளை நூலாசிரியர் இந்த நூலில் இணைத்திருக்கிறார். நாட்டார் மரபில் உள்ள செய்திகள் நூல் வடிவில் இதில் ஆவணப்படுத்தப் பட்டிருப்பது பாராட்டுதற்குரியது.

நூலின் இறுதிப் பகுதியில் மதுரையிலிருந்து நெடுவேள் குன்றம் கண்ணகி கோயில் வரை கண்ணகி 14 நாட்கள் நடந்து சென்ற பாதையாக அறியப்படும் வைகை நதிக்கரை சிற்றூர்களை வரைபடத்தின் வழியாக ஆசிரியர் காட்டுகின்றார். இது வரவேற்கத்தக்க ஒரு முயற்சி.

ஆய்வுத் தரம்வாய்ந்த இந்த நூலில் நூலாசிரியர் சான்றுகளைக்குறிப்பிடும் நூலின் ஒவ்வொரு பகுதியிலும் சான்றுகளைக் குறிப்பிடும்போது ஆய்வில் தான் துணைக்குறிப்புக்குப் பயன்படுத்திய நூல்களில் பெயர்களைக் குறிப்பிட்டு , பக்கங்களையும் குறிப்பிட்டு, ஒவ்வொரு பக்கங்களிலும் பின்குறிப்பு (Footnote) சேர்த்திருந்தால் நூலுக்கு ஆய்வுத்தரம் மிகுந்து சிறப்புக் கூட்டி இருக்கும். அடுத்த பதிப்பில் நூலாசிரியர் இதனைக் கவனத்தில் கொள்வார் என எதிர்பார்க்கிறேன்.

மிகுந்த ஆய்வுக் கண்ணோட்டத்துடன் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வு நூல் வடிவம் பெற்றிருக்கிறது. தமிழக தொல்லியல் அறிஞர் முனைவர் சாந்தலிங்கம் அவர்களின் முன்னுரை நூலுக்கு வழிகாட்டுகிறது. வைகைக்கரை

நாகரீகம் தமிழர் நாகரிகத்திற்கு மிகுந்த முக்கியத்துவம் கொள்ளப்படும் இக்காலகட்டத்தில் கண்ணகி பயணித்த நெடுவழிப் பாதையை ஆராயும் இந்த நூல் ஒரு நல்வரவு. நூலாசிரியருக்கு என் வாழ்த்துகளும் பாராட்டுகளும்.



குறிப்பு– கூகள் வரைபடத்தில் ஊர்களை சேர்த்து தயாரித்த வரைபடம் காட்டும் பெருவழி

நூலாசிரியர்: பாவெல் பாரதி
பதிப்பகம்: கருத்து=பட்டறை, மதுரை

– முனைவர் க. சுபாஷிணி

7. கன்னிமாரா நூலகத்தில் கார்ல் மார்க்ஸ் சிலை

— மூர்த்தி மலையாண்டி

சென்னை கன்னிமாரா நூலகம் முன்பு நிறுவப்பட்டுள்ள பேராசான் கார்ல் மார்க்ஸ் சிலையை தமிழ்நாடு முதலமைச்சர் நேற்று திறந்துவைத்தார். இந்தச் சிலை மென்மையாக

செதுக்கப் (smooth Finish) பட்டதல்ல, பார்க்கும்போது திப்பிதிப்பியாகத் தெரியும் வகையில் “Rough Texture”ராக உருவாக்கப்பட்டுள்ளது. இந்த முறை "இம்பாஸ்டோ" (Impasto) பாணி என்று அறியப்படுகிறது. சிலையை வடித்த சிற்பி, உளி அல்லது கைகளால் களிமண்ணை அழுத்திய தழும்புகள் அப்படியே வெண்கலத்தில் (Bronze) வார்ப்பிக்கப்படும். சிலையின் மேற்பரப்பு சீராக இல்லாததால், அதன் மீது ஒளி விழும்போது பல இடங்களில் நிழல்கள் உருவாகி, சிலைக்கு ஒரு உயிரோட்டத்தையும் ஆழத்தையும் தரும்.

இது போன்ற பாணி பெரும்பாலும் ஒரு மனிதனின் வலிமை, கடின உழைப்பு அல்லது தீவிரமான சிந்தனையை வெளிப்படுத்த பயன்படுத்தப்படுகிறது. இந்த பாணியை பிரபலப்படுத்தியவர் சீனாவைச் சேர்ந்த புகழ்பெற்ற சிற்பி வு வெய்சான் (Wu Weishan) ஆவார். கார்ல் மார்க்ஸ் பிறந்த ஊரான ஜெர்மனியில் உள்ள "ட்ரையர்" நகரத்தில் சிற்பி 'வு வெய்சான்' செதுக்கிய தோற்றத்தில் சென்னையில் உள்ள சிலையும் உள்ளது. இதைச் செதுக்கிய சிற்பி மதிப்புக்குரிய திரு கார்த்திகேயன். ஆனால் அவர் வு வெய்சானை அப்படியே காப்பியடிக்கவில்லை. டிரையரில் உள்ள சிலையில் மார்க்ஸின் முகமும் Rough Textureராகவே உள்ளது. ஆனால் சென்னைச் சிலையில் முகம் மட்டும் Smooth Finish பாணியில் வடிக்கப்பட்டுள்ளது. இது கம்பீரமும் கனிவும் சேர்ந்த தோற்றத்தைத் தருகிறது. சிற்பி கார்த்திகேயன் அவர்களுக்கு வாழ்த்தும், பாராட்டும் – நன்றியும் கூட! நிறுவிய தமிழ்நாடு அரசுக்கும், மாண்புமிகு முதலமைச்சருக்கும் சேர்த்து வாழ்த்துகளும், பாராட்டுகளும்.

எழுத்தாளர் அ. உமர் பாரூக் அவர்களது முகநூல் பதிவிலிருந்து (07–02–2026)

8. சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர்

— முனைவர் சிவ இளங்கோ

சிங்காரவேலனாரின் அரசியல் நுழைவுக் களமாகக் காங்கிரஸ் கட்சி இருந்தது. 1920 களில் காந்தியை "மகாத்மா" என்று ஏற்றுக் கொண்ட இந்திய அரசியல் தலைவர்களுள் முகமது அலி ஜின்னா, பெரியார் ஈ.வெ.ரா, ம. சிங்காரவேலனார் ஆகியோர் குறிப்பிடத் தகுந்தவர்கள்.

இதில் 1920 ஆம் ஆண்டில் காங்கிரஸ் தலைவர் மகாத்மா காந்தியோடு ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கு கொண்ட முஸ்லிம் லீகின் தலைவரான ஜின்னா, வரும் நாட்களில் காந்தியின் தேசியம் என்னும் பிம்பத்தின் பின்னாலிருந்த இந்துத்துவ கோர முகத்தைக் கண்டு கொண்ட பின்னர் தேசியத்தைக் கை விட்டவுடன், மத அடிப்படையில் நாட்டுப் பிரிவினை கோரும் நிலைக்குத் தள்ளப்பட்டார்.

1927ஆம் ஆண்டில் பெங்களூருவில் மகாத்மா காந்தியைச் சந்தித்த பெரியார், அவருடனான நீண்டநேர விவாதங்களின் விளைவாக, அவருக்குள் இருந்த சனாதனியைக் கண்டபிறகு, காந்தியார், "மகாத்மா" அல்ல என்ற முடிவுக்கு வந்து விடுகிறார்.

"காந்தி ஒரு நேர்மையான, ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்" என்னும் லெனினின் மதிப்பீட்டை, கம்யூனிஸ்ட் அகிலம் மாநாட்டிலேயே, "காந்தி ஒரு பிற்போக்குவாதி" என்று போட்டுடைத்தவர் உலகப் பொதுவுடமை இயக்கத்தின் (கோமின்டான்) தலைவர்களில் ஒருவரான எம். என். ராய். தொடர்ந்து, "காந்தி, இந்திய விடுதலை இயக்கத்தை, இந்து சமய மீட்சி இயக்கமாக மாற்றி

இருப்பதையும், நாளடைவில் ஆங்கிலேயர்களிடமே சுரண்டும் பூர்ஷ்வா வர்க்கத்துடன் சமரசம் செய்து கொள்வார்" என்று பேசியும், எழுதியும் வந்தார் எம்.என்.ராய்.

திரு. ராயின் கருத்துடன் சிங்காரவேலர் கொண்ட உடன்பாடு பின்னாட்களில் அவருடைய எழுத்துக்களில் தெரிந்தது. "ஒரு பக்கம் வருணாசிரமத்தை ஆதரித்துக் கொண்டு, இன்னொரு பக்கம் தீண்டாமை ஒழிக என்று காந்தியார் பிரசங்கம் செய்து வருவதில் பயனில்லை" என்று 1931 ஆம் ஆண்டிலேயே அறிவித்தார் சிங்காரவேலர். காந்தியின் "மகாத்மா" பிம்பமான அரிசன சேவா சங்கத்தின் அழைப்பை, "தீண்டாமையை ஒழிக்க வேண்டுமென்பது ஏழைகளை ஏமாற்றி அவர்கள் அறிவை விளங்காமல் வைத்திருக்கும் சூழ்ச்சி என்று விளங்குகிறது" என்றும், இன்ன பிற பிம்பங்களான கதர், தேசியம், சுயராஜ்யம் ஆகியவற்றையும் கபட நாடகங்கள் எனத் தோலுரித்தவர் சிங்காரவேலர் (குடிஅரசு, 25.10.1931).

காங்கிரஸ் கட்சியைப் "பிற்போக்குத் தனமானது" என்று வர்ணிக்கும் சிங்காரவேலர்,

அன்றைக்கிருந்த மற்றக் கட்சிகளையும் "உதவாக்கரைக் கட்சிகள்" என்றே குறிப்பிடுகிறார். அவருக்கு நண்பர்கள் அதிகமாக இருந்த தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் என்னும் ஜஸ்டிஸ் கட்சியையும், "குட்டி பூர்சுவாக் கட்சி" என்றே மதிப்பிடுகிறார். (ம. சிங்காரவேலரின், "சுயராஜ்யம் யாருக்கு?" நூல், இரண்டாம் பாகம்).

"கோடானுகோடி பாமர மக்களுக்கு வீடும், வாசலும், நீரும், நிலமும் சமமாகக் கிடைத்தால் ஒழிய எந்த அரசியல் இருந்தாலும், இல்லாவிட்டாலும் ஒன்றே" என்னும் சமத்துவ நிலைப்பாட்டுக் கொள்கையரான சிங்காரவேலர் (குடி அரசு, 1.11.1931), இந்தியாவில் அதற்கான ஒரே இயக்கமாகப் பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தைக் குறிப்பிட்டு, அவ்வியக்கத்தைச் "சுயமரியாதை சமதர்மக் கட்சி"யாக மாற்றியதில் பெரும் பங்கு வகித்தவர்.

(திரு. சிங்காரவேலனாரின் 167 ஆவது பிறந்த நாள் இன்று (18–02–26))

– முனைவர் சிவ இளங்கோ, புதுச்சேரி

9. தமிழ்த் தாத்தா உ.வே.ச

— சேலம் வரலாற்று ஆய்வு மையம்

தமிழ் மொழிக்கு அரும்பெரும் தொண்டாற்றியவரும், தமிழ்த்தாத்தா என்று போற்றிக் கொண்டாடப்படும் தமிழறிஞருமான உ. வே. சாமிநாத ஐயர் பிறந்த தினம் இன்று.

கும்பகோணத்துக்கு அருகே உத்தமதானபுரம் என்ற சிற்றூரில் பிறந்தவர் (1855). தந்தை ஒரு

இசைக் கலைஞர். அதே ஊரில் தொடக்கக் கல்வியும், இசையும் கற்றார்.

இவருக்கு தமிழில் இருந்த பேரார்வத்தைக் கண்டு, எங்கெல்லாம் தமிழ்ப் பாடம் கற்றுத் தருபவர்கள் இருந்தார்களோ அங்கெல்லாம் சென்று குடியேறி மகனுக்கு கல்வி கற்பிக்கச் செய்தார், தந்தை! புகழ்பெற்ற மகா வித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் 17ஆவது வயதில் 5 ஆண்டு காலம் தமிழ் கற்று தமிழறிஞர் ஆனார்.

1880 முதல் 1903 வரை கும்பகோணம் அரசுக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றினார். பின்னர் 1903 முதல் 16 ஆண்டுகள் சென்னை மாநிலக் கல்லூரியிலும் பணி புரிந்தார்.

பழந்தமிழ் ஏடுகள் பழையனவாக இருந்ததால் அவற்றைப் புதுப்பிக்க வேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. பல இடர்களை எதிர்கொள்ள நேர்ந்தாலும் விடாப்பிடியாக முயன்று 1887இல் சிந்தாமணியை வெளியிட்டார்.

அன்று முதல் இறுதி மூச்சு வரையில், ஆங்காங்கே மறைந்து கிடந்த தமிழ்த் தாயின் ஒவ்வொரு அணி கலனாகத் தேடித் தேடிக் கண்டுபிடித்து,

புதுப்பித்து தமிழன்னையை அலங்கரித்தார். இவரது காலத்துக்கு முன்பு பெரும் புலவர்களின் படைப்புகள், சங்க நூல்கள், அகநானூறு, புறநானூறு, மணிமேகலை ஆகியவை வெறும் பெயரளவிலேயே இருந்தன.

அழிந்து மறைந்து போகும் நிலையில் இருந்த பண்டைத் தமிழ் இலக்கியங்கள் பலவற்றைத் தேடித் தேடி அச்சிட்டு, பதிப்பித்தார். இதன் மூலம் தமிழ் இலக்கியத்தின் தொன்மையையும், செழுமையையும் உலகறியச் செய்தார். 100க்கும் மேற்பட்ட புத்தகங்களை அச்சிட்டுள்ளார். 3000க்கும் அதிகமான ஏட்டுச் சுவடிகளையும் கையெழுத்து பிரதிகளையும் அரும்பாடுபட்டு சேகரித்தார்.

சமண இலக்கியங்களோடு சங்க இலக்கியங்கள், காப்பியங்கள், புராணங்கள், சிற்றிலக்கியங்கள் அடங்கிய ஏராளமான ஓலைச் சுவடிகளையும் தேடித் தேடி, அவற்றை பகுத்து, வேறுபடுத்தி, தொகுத்து, பிழைதிருத்தி அச்சிலேற்றினார். இதன் மூலம் இவற்றை அழிவிலிருந்து காத்ததோடு அடுத்தடுத்து வரும் தலைமுறையினருக்கும் தமிழின் பெருமையை உணர்த்தியுள்ளார்.

பின்னாளில் அவற்றுக்கு உரையும் எழுதினார். சங்க காலத் தமிழும் பிற்காலத் தமிழும், பழையதும் புதியதும், நல்லுரைக் கோவை உள்ளிட்ட பல உரைநடை நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார். கருத்தாழமும், நகைச்சுவையும் கலந்து இழையோடப் பேசும் திறன் கொண்டவர்.

தமிழ் இலக்கியத்துக்கு இவர் ஆற்றிய பங்களிப்பைப் பாராட்டி சென்னைப் பல்கலைக்கழகம் இவருக்கு முனைவர் பட்டம் வழங்கியது. இதைத் தவிர மகாமகோபாத்தியாய, தக்ஷிண கலாநிதி ஆகிய பட்டங்களும் பெற்றார்.

இவரைச் சிறப்பித்து இந்திய அரசு தபால் தலை வெளியிட்டது. சென்னை பெசன்ட் நகரில் இவரது பெயரில் நூல் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ் தாத்தா என்று போற்றப்படும் இவர், 1940ஆம் ஆண்டு 84ஆம் வயதில் காலமானார்.

நன்றி சேலம் வரலாற்று ஆய்வு மையம்
(19–02–26)

10. கடைசி பஸ்

— முனைவர் ப. பாண்டியராஜா

இது எனது அடுத்த தொடரடைவுக்கான அறிவிப்பு.

இப்பொழுதெல்லாம் விடிய விடிய பேருந்துகள் ஓடிக்கொண்டிருக்கின்றன.

ஆனால், ஒரு காலத்தில் பேருந்துகள் – அதிலும் நகர்ப்பேருந்துகள் – இரவு 11 மணிக்கு நிறுத்திவைக்கப்படும்.

எனவே, கடைசி பஸ் என்ற ஒன்று இருந்தது. அதைத் தவறவிட்டால், மறுநாள் காலைவரை காத்திருக்கவேண்டும்.

அதிலும், கிராமப்புறங்களில், இந்தக் கடைசி பஸ்ஸுக்கு மவுசு ரொம்ப அதிகம்.

சில கிராமங்களில் மாலை 5 மணியளவில் வந்துசெல்லும் பேருந்துகளே கடைசி பஸ் ஆகும்.

எனவே அந்தப் பேருந்து வரும்போதே 'பாம், பாம்' என்று ஒலி எழுப்பிக்கொண்டே வரும். வந்து அது திரும்பிச் செல்ல ஆரம்பிக்கும்போது, எங்கிருந்தோ ஒரு சந்துக்குள்ளிருந்து ஒரு பெரியவர் 'ஸ்டாப், ஸ்டாப்' என்று கூவிக்கொண்டு ஓடமாட்டாமல் ஓடிவரும் காட்சி அடிக்கடி நடக்கும். அப்போதெல்லாம், அந்தப் பேருந்துக்கு அருகில் இருக்கும் சிலர், அவரைக்காட்டிலும் அதிகமாக 'ஸ்டாப், ஸ்டாப்' என்று கத்தி, அந்தப் பேருந்தை நிறுத்துவார்கள். கண்டக்டர் எட்டிப்பார்த்து, 'சீக்கிரம், சீக்கிரம்' என்று துரிதப்படுத்துவார்.

இதற்கிடையில் இன்னும் ரெண்டு மூன்று பேர் வேகமாக வந்து தொத்திக்கொள்வார்கள்.

இப்பொழுது என் நிகண்டுகளுக்கான தொடரடைவு உருவாக்கமும் இப்படி ஆனது.

முக்கியமான நூற்றுக்கும் மேற்பட்ட இலக்கியங்களுக்குத் தொடரடைவுகள் உருவாக்கிவிட்ட பின்னர், வேறு எதனை எடுக்கலாம் என்று யோசித்தபோது, எனக்கு நினைவில் வந்தது 'நிகண்டுகள்'–தான். தமிழ் இணையக் கழகத்தில் மூன்று நிகண்டுகள் இருந்தன.

அவற்றுக்குத் தொடரடைவுகள் உருவாக்கினால் போதும் என்ற எண்ணத்தில்தான் முதலில் தொடங்கினேன்.

அந்த நிகண்டுகளின் அமைப்பில் மனத்தைப் பறிகொடுத்த நான் வேறு நிகண்டுகளையும் பல இணையதளங்களில் தேடிக்கண்டுபிடித்து ஒவ்வொன்றாக இணைக்கத் தொடங்கினேன்.

15 நிகண்டுகளை இவ்வாறு எடுத்து முடித்தேன்.

இனி போதும் என்று முடிவுசெய்து, இப்போது தனித்தனியாக இருக்கும் 15 நிகண்டுகளையும் ஒன்றிணைத்து, அவற்றை ஒரே தொடரடைவுக்குள் கொண்டுவரும் முயற்சியைக் முன்னெடுக்கும்போது, அந்தக் கடைசி பஸ் கூக்குரல் கேட்டது.

”ஸ்டாப், ஸ்டாப், நானும் வர்ரேன்’ என்று ஒரு நிகண்டு கூவியது. திரும்பிப் பார்த்தால், அதன் பெயர் அகராதி நிகண்டு.

அகராதி என்றால், சொற்களை அகரவரிசையில் அடுக்கி, அவற்றுக்குப் பொருள் தருவது.

நிகண்டு என்றால் சொற்களை, தெய்வம், மக்கள், விலங்கு எனப் பல்வேறு பிரிவுகளாக வகுத்து அவற்றுக்கு, நூற்பா வடிவில் பொருள் தருவது.

இந்த அகராதி நிகண்டு என்பது, அகரவரிசையில் சொற்களை அடுக்கி, அவற்றுக்கு நூற்பா வடிவில் பொருள் தருவது.

மச்ச கன்னி மாதிரி.

சரி, இதனையும் எடுத்துக்கொள்ளலாம் என்று பார்த்தால், அதே பெயரில் வேறு இரண்டு நிகண்டுகளும், எங்களையும் சேர்த்துக்கொள்ளுங்கள் என்று கூவுகின்றன.

ஆம், அகராதி நிகண்டு என்ற பெயரில் மூன்று நிகண்டுகள் உள்ளன.

இந்த மூன்றனுள், நான் முதலில் எடுத்தது, உ.வே.சா நூலகம் 2003–இல் வெளியிட்ட ஓர் அகராதி நிகண்டு. இதன் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. பசுபதி, மேகலா, சாயிராமன் என்ற மூவர் இணைந்து பதிப்பித்தது.

இந்த அகராதி நிகண்டுக்கான தொடரடைவு இப்போது உருவாக்கப்பட்டுள்ளது.

இதனை tamilconcordance.in என்ற எனது இணையதளத்தில், தொடரடைவுகள் –– > நிகண்டுகள் என்ற தலைப்பின் கீழ் காணலாம்.

இது எனது 16–ஆவது நிகண்டு.

மொத்தத்தில் தொடரடைவுக்கான 117–ஆவது நூல்.

இனி, அடுத்த அகராதி நிகண்டுக்கான தொடரடைவுச் செய்தியுடன் சந்திக்கிறேன்.

– முனைவர் ப. பாண்டியராஜா

11. பரணர்

— அருள் மெர்வின்

நற்றிணை 300 பரணர் எழுதிய ஒரு காதல் பாடல். ஒரு சங்ககாலப் பெண்ணின் பின்னால் இரண்டு ஆண்கள் சுற்றுவதைப் பற்றிய பாடல். ஒருவன் தேர் (அந்தகால BMW) ஒன்றை அவள் வீட்டு முன்னால் நிறுத்திவைத்துப் பணத்தால் அவளைக் கவர முயல்கிறான். இன்னொருவன் அவள் வீட்டு முன்னால் உட்கார்ந்து கொண்டு நரம்புக் கருவி (அந்தகால கிட்டார்) ஒன்றை வாசித்து இசையால் அவளைக் கவர முயல்கிறான். அவள் அந்த இசைக்கலைஞனிடம் பாடியது போதும், வீட்டு முன்னே நிற்கும் இந்த தேரை எடுத்துக் கொண்டு இங்கிருந்து கிளம்பு என்கிறாள்! என்ன ஒரு சிறுகதை!

சங்க இலக்கியத்தில் அளவுக்கு அதிகமான பாடல்களை எழுதியிருப்பவர் கபிலர். கிடைத்த இரண்டாயிரத்துச் சொச்சம் பாடல்களில் இருநூறுக்கும் மேற்பட்ட, அதாவது பத்து சதவீதத்துக்கும் மேற்பட்ட பாடல்களை எழுதியிருப்பவர். இன்றைய சமூகவலைத்தள ஐடிகள் போல பலபேர் கபிலர் என்ற பெயரிலும்

எழுதியிருக்கலாம். கபிலருக்கு அடுத்தபடியாக அதிக பாடல்களை எழுதியிருப்பவர் பரணர். எண்பதுக்கும் மேற்பட்ட பாடல்களை எழுதியிருக்கிறார். புலவர் கா. கோவிந்தன் என்பவர் 1950–களில் பரணர் பற்றி ஆராய்ந்து எழுதியது புத்தகமாக வெளிவந்திருக்கிறது. இத்தனை பாடல்களை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுதிவைத்த பரணர் போன்ற புலவர்களின் வரலாற்றை எவரும் எழுதிவைக்கவில்லை, அவர்கள் எழுதிய பாடல்களை வைத்தேதான் அவர்கள் வரலாற்றை எழுதவேண்டிய நிலை இருக்கிறது என்று முன்னுரையில் புலம்பியிருக்கிறார். புலவர்கள் வரலாற்றைக் காப்பாற்றாத நம்மையெல்லாம் (அதாவது, நம் முன்னோர்களையெல்லாம்) நன்றி கெட்டவர்கள் என்றும் திட்டியிருக்கிறார்.

பரணர் என்ற புலவரைப் பற்றி மற்ற புலவர்களும் பொறாமை ஏதுமின்றி தங்கள் பாடல்களில் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஔவையார் அதியமானின் பெண் நண்பர் என்று நமக்குத் தெரியும். அதியமானைப் பற்றி ஔவையார் எழுதிய புறநானூற்றுப் பாடல் (99) ஒன்றில், “அன்று உனக்குப் பாடவே வராது. இன்று உன்னைப் பற்றி பரணரே பாடுகிறார்”, என்பதாக

எழுதியிருக்கிறார். ஔவையார் பொதுவாகவே இப்படி நக்கலாக எழுதும் பழக்கம் உள்ளவர் என்றாலும் சங்க காலத்தில் பரணரைப் பெரிதாக மதித்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. பரணர் எழுதிய பாடல்களின் ஸ்பெஷல் என்னவென்றால் ஏகப்பட்ட சங்ககால மன்னர்கள் பற்றிய தகவல்களைத் தன் பாடல்களுக்குள்ளே கோர்த்துவிட்டிருக்கிறார். அதுவும், காதல் பாடல்களுக்கு நடுவே கோர்த்துவிட்டிருக்கிறார். இன்று எகிப்தில் 'சிகை கொற்றன்' கிடைத்தது பற்றிப் பேசுகிறோம். எகிப்தில் செங்கடல் பிளந்த சம்பவம் பற்றியெல்லாம் இவர் பாடல் ஒன்றில் வருகிறது (முந்நீர் முற்றி ஓங்கு திரைப் பெவைம் நீங்க). சந்தேகம் இருந்தால் அகநானூறு 212.

முதல் பத்தியில் குறிப்பிட்ட பரணர் எழுதிய நற்றிணைப் பாடலில் உவமையாக ஓர் இளவரசி பற்றிச் சொல்லி ஆரம்பிக்கிறார் (சுடர்தொடிக் கோமகள்). அவளுக்குக் கோபம் வந்தால் எதிரே உள்ள அத்தனை பேரும் கைகூப்பி வணங்கி நிற்பார்கள் என்கிறார் (மடத்தகை ஆயம் கைதொழுது). இந்த சங்ககால கோபக்கார இளவரசி யாரென்று தெரியவில்லை. பெயரையும் பரணர் சொல்லவில்லை. ஆராய்ச்சி செய்து கண்டுபிடிக்க வாய்ப்பில்லை. ஆனால், இதே

பாடலில் உவமையாக 'தழும்பன்' என்னும் சங்ககால மன்னனைப் பற்றிக் குறிப்பிடுகிறார். தழும்பனைப் பற்றி ஆராய்ந்து இவரது வரலாற்றை எப்படி எழுதுவது என்று அடுத்த பாகத்தில் கற்றுக் கொள்வோம்.

12. தழும்பன் வரலாறு

— அருள் மெர்வின்

தழும்பன் என்ற சங்ககால அரசன் பற்றி தேடினால் அது கத்தரிக்காயில் போய் முடிகிறது.

காதலன் ஒருவன் காதலி வீட்டு அடுப்படியில் ஓலையை உரசிக்கொண்டு (அட்டில் ஓலை தொட்டனை நின்மே) அவள் காதலுக்காக ஏங்கி நிற்கிறான். அவள் அவனைப் பார்த்து, "அழகான தழும்பனின் ஊணூரில் பிச்சையெடுக்க வந்த யானை போல் என் வீட்டு அடுப்படியில் ஓலையை உரசிக்கொண்டு நிற்கிறாய்", என்கிறாள். "ஏர் தழும்பன் ஊணூர் ஆங்கண் பிச்சை சூழ் பெரும் களிறு போல...". நற்றிணை 300–இல் பரணர் எழுதிய உவமை. இந்த உவமையில் வரும் தழும்பன் யார்?

தழும்பு என்றால் என்ன அர்த்தம் என்று அகராதிகளில் தேடினால் அது இன்று வரை உபயோகிக்கப்படும் சங்ககால வார்த்தை என்று தெரியவரும். அந்த காலத்தில் தடுப்பூசி போட்டவர்களுக்குத் தோள்பட்டைகளில் தழும்பு இருக்கும். காயங்கள் நம் தோலில் விட்டுச்

செல்லும் நினைவுச் சின்னம் தழும்பு. பெரிய காயம் என்றால் தழும்பு கத்தரிக்காய் போல வழுவழுவென்று இருக்கும்.'தழும்பன்' என்பவன் தழும்பைக் கொண்டவன் என்ற தகவல் கிடைத்துவிட்டது.

நற்றிணை 300–இல் 'ஏர் தழும்பன்' என்று வருகிறது. ஏர் என்றால் உடனே ஏர் உழவன், கலப்பை, ஜனதா பார்ட்டி என்றெல்லாம் முடிவுக்கு வரும் முன் 'ஏர்' என்ற சொல்லுக்கு அந்த காலத்தில் வேறு ஏதாவது அர்த்தம் இருந்திருக்கிறதா என்று கொஞ்சம் அகராதிகளைப் புரட்ட வேண்டும். கூகிளில் தேடினால் இப்போது AI–யும் குறுக்கே வந்து பதில் சொல்கிறது. 'ஏர்' என்றால் 'அழகு' என்றும் ஒரு பொருளைச் சொல்கிறது. AI பதில்களை நம்ப முடியாது என்பதால் மற்றவர்களும் 'அழகு' பொருளைச் சொல்கின்றனரா என்று நாமும் கூகிளின் குறுக்கே சென்று தேடிக்கொள்ள வேண்டும். அப்போது ஒரு திருக்குறள் தென்படும். "கரப்பிலா நெஞ்சின் கடனறிவார் முன்நின்று இரப்புமோர் ஏர் உடைத்து (1053). "ஒளிப்பு இல்லாத நெஞ்சும், கடைமையுணர்ச்சியும் உள்ளவரின் முன்னே நின்று இரந்து பொருள் கேட்பதும் ஓர் 'அழகு'

உடையதாகும்", என்று மு.வ. உரை எழுதியிருப்பார். கலைஞர் தனது உரையில் 'பெருமை' உடையதாகும் என்று எழுதியிருப்பார். இன்னும் ஆழ்ந்து கூகிளில் தேடினால் 'ஏர்' என்ற சொல்லுக்கு இலக்கியங்களில் எழுச்சி, நன்மை போன்ற அர்த்தங்களும் உள்ளன என்று தெரியவரும். தழும்பன் என்பவனின் தழும்பு மேலே எழுந்து மேடு மாதிரி இருப்பதால் எழுச்சித் தழும்பு கொண்டவன் என்றோ, அது அழகாக இருப்பதால் அழகுத் தழும்பு கொண்டவன் என்றோ, அது அவனுக்கு பெருமையைத் தருவதால் பெருமைத் தழும்பு கொண்டவன் என்றோ 'ஏர் தழும்பன்' என்ற சொற்றொடரைப் புரிந்து கொள்ளலாம். பரணர் என்ன அர்த்தத்தில் எழுதினார் என்று உறுதியாகச் சொல்வதற்கில்லை. மொத்தத்தில் 'ஏர் தழும்பன்' என்ற சொற்றொடரை மட்டும் வைத்துக் கொண்டு அவன் வரலாற்றைப் பற்றி கதை ஏதும் விட வாய்ப்பில்லை.

"ஏர் தழும்பன் ஊணூர் ஆங்கண் பிச்சை சூழ் பெரும் களிறு போல" என்ற நற்றிணை 300 சொற்றொடரில் தழும்பன் பற்றிய வேறு சில தகவல்கள் உள்ளன. அவனது ஊர் 'ஊணூர்'. அவன் ஊரில் யானை பிச்சையெடுத்திருக்கிறது.

இதை வைத்துக் கொண்டு அடுத்த கட்டத் தேடலுக்குச் செல்ல வேண்டும். அதற்கு tamilconcordance அல்லது சங்கம்பீடியா இணையதளத்தைத் திறக்க வேண்டும். சங்க இலக்கியங்களில் வேறு எங்கெல்லாம் இந்த 'தழும்பன்' வருகிறான், வேறு எங்கெல்லாம் இந்த 'ஊணூர்' வருகிறது என்று கண்டறிய வேண்டும்.

சங்க இலக்கியங்களில் மூன்று பாடல்களில் 'தழும்பன்' பற்றிய குறிப்புகள் வருகின்றன என்று சொடுக்கியவுடன் தெரிந்துவிடும். அதில் முதலாவதாக, மேலே நாம் ஆரம்பித்த நற்றிணை 300, பரணர் எழுதியது. இரண்டாவதாக, புறநானூறு 348. இது ஒரு காதல் பாடல். ஏன் புறநானூறில் கொண்டு வைத்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை. இதுவும் பரணர் எழுதியதுதான். "மீன்களைப் பிடித்துச் சுத்தம் செய்யும் பாணர்கள் வாழும் சேரி இருக்கும் வாய்மொழித் தழும்பனின் ஊணூர் போன்ற..." என்று ஓர் உவமையைச் சொல்கிறார். "சிறுசின மீன் சீவும் பாண் சேரி வாய்மொழித் தழும்பன் ஊணூர் அன்ன..."

இப்போது நமக்கு இன்னும் சில தகவல்கள் கிடைத்திருக்கின்றன. அந்த காலத்தில் மீனைப்

பிடித்துக் கொண்டு பல கிலோமீட்டர்கள் நாட்டுக்குள் கொண்டுவர ஐஸ் பெட்டிகளெல்லாம் இருந்திருக்காது. மீன்களைப் பிடித்துச் சீவும் சேரி கடற்கரைப் பக்கம்தான் இருந்திருக்க வேண்டும். அப்படியானால் தழும்பனின் ஊணூர் கடற்கரை அருகிலுள்ள ஊர். நற்றிணையில் 'ஏர் தழும்பன்' என்றவனை இங்கே 'வாய்மொழித் தழும்பன்' என்கிறார் பரணர். திருக்குறளை வள்ளுவர் வாய்மொழி என்பார்கள். பொய்யா மொழி. 'வாய்மொழி' என்பது பல அர்த்தங்களில் சங்க இலக்கியங்களில் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் எதுவும் தழும்பனைப் பற்றிய தகவல்களைக் கொடுக்காது. அதனால் பொய் சொல்லாத தழும்பன் என்று வைத்துக் கொள்வோம்.

மூன்றாவதாக, தழும்பன் நமக்குச் சிக்குவது அகநானூறு 227. இதை எழுதியது நக்கீரர். இதில் இன்னும் சில தகவல்கள் கிடைக்கின்றன. தலைவி காதலனைப் பற்றிச் சொல்லும் பாடலில் மறுபடியும் ஓர் உவமையில் தழும்பன் வருகிறான்.

"தூங்கல் பாடிய ஓங்கு பெரு நல் இசைப்
பிடி மிதி வழுதுணைப் பெரும் பெயர்த் 'தழும்பன்'

கடி மதில் வரைப்பின் ஊணூர் உம்பர்
விழு நிதி துஞ்சும் வீறு பெறு திரு நகர்
இருங் கழிப் படப்பை மருங்கூர்ப்பட்டினத்து”

தூங்கல் பாடிய... என்று ஆரம்பிக்கும் வரியை இப்போதைக்குத் தள்ளிவைத்துவிடுவோம். ‘பிடி மிதி வழுதுணைப் பெரும் பெயர்த் தழும்பன்’ என்ற வரியைப் படித்துப் புரிந்து கொள்வோம். ‘பிடி’ என்றால் பெண் யானை. ‘மிதி’ என்றால் காலில் போட்டு மிதித்தல். ‘பெரும் பெயர்த் தழும்பன்’ என்றால் பெரிய பெயர் வாங்கிய தழும்பன். எல்லாம் சாதாரணச் சொற்கள். யானை காலில் மிதி வாங்கி பெரிய பெயர் வாங்கிய தழும்பன் என்பது போல் அர்த்தம் வருகிறது. ஆனால் நடுவே ‘வழுதுணை’ என்ற சொல் வருகிறது.

‘வழுதுணை’ என்றால் என்ன? சங்க இலக்கியங்களில் ‘வழுதுணை’ என்ற சொல் இந்த ஒரு பாடலில்தான் வருகிறது என்று tamilconcordance–இல் சொடுக்கினால் தெரியவருகிறது. இதே இணையதளத்தில் சங்கம் தவிர ஏகப்பட்ட தமிழ் இலக்கியங்கள், நிகண்டுகள் எல்லாம் உள்ளன. அவற்றில் வழுதுணை எங்கேயெல்லாம் வருகிறது என்று

தேட வேண்டும். தேடினால், 'வழுதுணை' என்றால் கத்தரிக்காய் என்ற ஆச்சரியமான தகவல் கிடைக்கும். நாலடியாரில் இருக்கிறது, நிகண்டுகளில் இருக்கிறது, மதுரைக்காஞ்சி உரையில் இருக்கிறது. இப்போது கூகிளில் கத்தரிக்காய், eggplant, brinjal, aubergine பற்றித் தேடினால் 'vatigagam' என்ற வடமொழிச் சொல்தான் உலகிலேயே கத்தரிக்காயின் பழைய பெயர் என்கிறார்கள். தழும்புக்குத் தமிழில் இன்னொரு பெயர் 'வழு'. கீழே விழுந்தால் வழு உருவாகும். கத்தரிக்காய் போல் வழுவழுவென்று அந்த தழும்பு இருக்கும். வழுதுணை! இந்த வழுதுணைக்காய் வாயில் நுழையாமல் வடமொழியில் vatigagam ஆகியிருக்கலாம். இந்த vatigagam நம் வாயில் நுழையாமல் கத்தரிக்காய் ஆகியிருக்கலாம்.

வரவர சங்க இலக்கியங்கள் பற்றி எழுதுவதைப் பலர் வாசிப்பதில்லை என்பதால் தழும்பன் வரலாற்றை வேகமாக முடித்து விடுகிறேன். அகநானூறு 227–இல் வரும் மற்ற சொற்களைத் தேடினால் தழும்பனைப் பற்றி 'தூங்கல்' என்ற பாடல் பாடப்பட்டிருக்கிறது என்பது தெரியவரும். 'தூங்கல்' பற்றித் தேடினால் அந்த பாடலைப் பாடிய புலவர் 'தூங்கலோரியார்' என்று

தெரியவரும். ஆனால், தூங்கலோரியார் தழும்பனைப் பற்றி எழுதிய பாடல் நமக்குக் கிடைக்கவில்லை என்றும் தெரியவரும். ஊணூர் என்ற ஊர் மருங்கூர்ப்பட்டினத்துக்கு அருகிலுள்ள ஊர் என்ற தகவலும் அகநானூறு 227 வரிகளில் இருந்து தெரியவரும். கூகிள் மேப்பில் மருங்கூரைத் தேடினால் கன்னியாக்குமரி மாவட்டத்தில் மயிலாடி அருகே காண்பிக்கிறது. இந்த பாடலை எழுதிய நக்கீரர் எழுதிய இன்னோரு பாடலில் (நற்றிணை 358) – மறுபடியும் ஒரு காதல் உவமையில் – பசும்பூண் வழுதி என்ற அரசனின் 'மருங்கை' என்ற ஊரைக் குறிப்பிடுகிறார். அதுவும் கடற்கரை ஊர். இனி பசும்பூண் வழுதி யாரென்று தேடினால்... சங்க இலக்கியங்களில் வரலாற்றைத் தேடுவது என்பது ஒரு சங்கிலி. புலவர்கள் காதலுக்கு உவமைகள் ஏதுமின்றி எழுதியிருந்தால் ஒரு வரலாறும் நமக்குத் தெரிந்திருக்காது.

13. தாய் மொழியைக் கொண்டாட வேண்டும்

— முனைவர் க சுபாஷிணி

எனக்கு எழுத, பேச, படிக்க நான்கு மொழிகள் தெரியும். ஒரு சில மொழிகளில் சில சொற்கள் மட்டும் தெரியும். மலேசியாவில் பிறந்து வளர்ந்தாலும், தமிழ் மொழியிலேயே வீட்டில் பேசி வளர்ந்ததால் தமிழ் மொழியிலேயே சிந்திக்கும் பழக்கம் தொடக்கத்திலேயே எனக்கு வந்துவிட்டது.

நான் பொது மேடைகளில் உரையாற்றும் போது பலரும் நான் தூய தமிழில் உரையாற்றுவதாகச்

சொல்லி பாராட்டுவார்கள். அப்படி இருந்தும் கூட சில பிறமொழிச் சொற்கள் கலந்து விடுவதைத் தவிர்க்க நான் எப்போதும் முயற்சி செய்வதுண்டு.

ஐரோப்பாவிற்குப் புலம்பெயர்ந்த பின்னர்தான் ஒவ்வொரு நாடுகளுக்கும் தாய்மொழி என்பது எவ்வளவு அவசியம் என்பதை நான் உணர்வுப் பூர்வமாகப் புரிந்து கொண்டேன். ஐரோப்பிய நாடுகள் ஒவ்வொன்றும் அதன் தாய் மொழிக்குக் கொடுக்கின்ற முக்கியத்துவம் தான் எனக்கு இந்தப் புரிதலை ஏற்படுத்தியது.

ஐரோப்பிய சூழலில் வாசிப்பதற்கு நிறைய நேரம் கிடைத்ததால் எனது தமிழ் மொழியை நான் செம்மைப்படுத்திக் கொண்டேன். அதன் காரணத்தால் நான் எனது கணினி துறை அலுவலகப் பணிகளுக்கு இடையே தமிழ் மொழியில் இதுவரை 23 ஆய்வு நூல்களை எழுதி வெளியிட்டு இருக்கின்றேன் என்பது எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது.

இன்றும் கூட கனவிலும் தமிழ் மொழியிலேயே சிந்திக்கின்றேன்.

இன்று உலக தாய்மொழிகள் தினம். நாம் ஒவ்வொருவரும் நமது தாய் மொழியைக் கொண்டாட வேண்டும்.

"Youth voices on multilingual education" இதுவே இவ்வாண்டிற்கான தாய் மொழிகள் தின கருப்பொருளாக அமைகிறது.

தமிழ் வாழ்க!
தமிழ் வெல்க!

– முனைவர் க. சுபாஷிணி
(21.02.2026)

14. AI என்ன செய்யும்? சிலப்பதிகாரத்தை வாசிக்க வைக்கும்!

— அருள் மெர்வின்

இன்றைய ஏஐ தொழில்நுட்பம் எல்கேஜி படிக்கும் மனித மூளை அறிவிலான ஒரு தொழில்நுட்பம். இந்த எல்கேஜி ஏஐ–யே எதையெல்லாம் விழுங்கி ஏப்பம் விடப்போகிறது என்று ஒரு மளிகை சாமான் லிஸ்டு உள்ளது. எதை முதலில் முழுமையாக விழுங்கப்போகிறது என்பதுதான் கேள்வி. இந்த பதிவை செல்போனிலோ கம்ப்யூட்டரிலோ வாசிக்கும் நீங்கள் கொஞ்சம் சுதாரிப்புடன் இருந்தால் ஏஐ முதலில் விழுங்கப்போவது 'ஊடகங்கள் வழியேயான படைப்புகள்' என்பது உறைத்திருக்கும். இன்றைய தேதிக்கு ஏஐயிடம் எளிதாக வகையாகச் சிக்கியிருப்பவை ஊடகங்களின் மூலம் மனிதர்கள் படைப்பவை.

ஆதாம் போன்றவர்கள் வாழ்ந்த ஆரம்ப காலங்களில் சக மனிதர்கள் செய்த சேட்டைகளை, அவர்கள் சாப்பிட்டதை,

கும்பிட்டதை, படைத்ததையெல்லாம் தெரிந்துகொள்ள சம்பந்தப்பட்டவர்களை நேரில் சென்று சந்தித்தால் மட்டுமே சாத்தியம் என்ற கட்டாயம் இருந்தது. இந்த கட்டாயத்தை அழித்து ஓர் 'ஊடகம்' வழியே தூரத்திலிருப்பவர்களும் தெரிந்துகொள்ளும் சாத்தியம் படிப்படியே உருவானது. இதற்கு முதலில் மனிதர்களையே ஊடகமாக உபயோகித்தார்கள். வாய்மொழியாக படைப்புகளைக் கடத்தினார்கள். இதற்கு மொழிச் சங்கிலி, இனச் சங்கிலி, மதச் சங்கிலி, இன்னபிற சங்கிலிகள் எல்லாம் தேவைப்பட்டன. படிப்படியே ஓவியம், சிற்பம், எழுத்து போன்ற ஊடகங்கள் வந்தன. ஒருவர் சொல்ல நினைத்ததை, படைத்ததை கல்லிலோ, சுவரிலோ, ஓலையிலோ, பேப்பரிலோ பதிந்து வைக்கும் வசதி. இது போன்ற ஊடகங்களைதான் பத்தொன்பதாம் நூற்றாண்டு ஆரம்பம் வரை கடவுளென நம்பியிருந்தார்கள். தான் எப்படி இருக்கிறேன் என்று உலகுக்குக் காட்டவேண்டுமென்றால் ஒரு சிற்பியையோ, ஓவியரையோ நம்பியிருக்க வேண்டிய அவசியம் எல்லாக் கடவுளுக்கும் இருந்தது. செல்ஃபி வசதிகளெல்லாம் அன்று இல்லை.

பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து இன்றுவரை ஊடகம் எப்படி வளர்ந்திருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். அன்று வாய், கல், பேப்பர் போன்ற ஊடகங்களை நம்பியிருந்த படைப்புகள் இன்று செல்போனையும், கம்ப்யூட்டரையும், இன்னபிற டிஜிட்டல் கருவிகளையும் நம்பியிருக்கும் அளவு தொழில்நுட்பம் வளர்ந்திருக்கிறது. நாம் புரிந்துகொள்ள வேண்டியது – இந்த ஊடகங்களைதான் இன்றைய எல்கேஜி ஏஐயும் நம்பியிருக்கிறது என்பது.

மனித வரலாற்றில் ஊடகம் வழியே கடத்தப்பட்ட படைப்புகளின் அடிப்படை கூறுகள் ஒலியும், ஒளியும், மொழியும். இன்று ஏஐ தன் வசம் கொண்டு வந்திருப்பவையும் ஒலியும், ஒளியும், மொழியும். இன்ஸ்டாகிராமில் ஏஐ தயாரித்த ரீல்ஸ்கள் வந்துவிட்டன. ஏஐ தயாரித்த யூட்யூப் காணொலிகள் வந்துவிட்டன. ஏஐ எழுதிய புத்தகங்கள் சர்வதேச விருது வாங்கும் வரை சென்றிருக்கின்றன. ஏஐ தயாரித்த செய்திகள் வந்துவிட்டன. இரண்டு ஆண்டுகளுக்குள் முழுமையான ஏஐ திரைப்படங்கள் வந்துவிடும். மனிதர்கள் சினிமா ஹீரோ ஆவது, ஆட்சியைப் பிடிப்பது எல்லாம் நம் கண்முன்னேயே

காலாவதியாகிவிடும். எழுதி வைத்துக் கொள்ளுங்கள் – இன்னும் பத்து ஆண்டுகளில் நீங்கள் போட்டோ கூட எடுக்க மாட்டீர்கள். என்னமாதிரி போட்டோ வேண்டும் என்று ஏஐயை கேட்பீர்கள். அது தயாரித்துக் கொடுக்கும்.

ஒரு படைப்பை இது ஏஐ படைத்ததா அல்லது மனிதன் படைத்ததா என்று மனிதனால் கண்டுபிடிக்கமுடியாத நிலையில் அந்த படைப்புத்துறை ஏஐ வசம் சென்றுவிடும். அப்படியே கண்டுபிடிக்க முடிந்தாலும் அந்த வேறுபாடு அந்த படைப்பை ரசிப்பவருக்கு ஒரு பிரச்சனையில்லை என்றிருந்தாலும் அந்த படைப்புத்துறை ஏஐ வசம் சென்றுவிடும். மாவை அரைத்தது ஆட்டுக் கல்லா, கிரைன்டரா என்ற வித்தியாசம் மங்கிப் போனதும் கிரைன்டர் மட்டுமே மாவை அரைக்க ஆரம்பித்துவிட்டது. ஆட்டுக் கல் அருங்காட்சியகம் சென்றுவிட்டது. படைப்புகள் = தோசை மாவு.

இதுதான் கடைசி டிகேட். படைப்புத் துறைகள் முற்றிலும் மாறிவிடும். முகநூல், வாட்சப்பெல்லாம் ஒருவேளை பிழைத்திருந்தாலும் இது போன்ற பதிவுகளைப் படைக்க மனிதர்கள் தேவைப்பட மாட்டார்கள். மாதச் சம்பள வேலையைத்

துறந்துவிட்டு இலக்கியவாதிகள், கவிஞர்கள், இலக்கியத் திறனாய்வாளர்களெல்லாம் ஆகி மனித சமூகத்துக்குக் கடமையாற்ற வேண்டிய அவசியமோ, ஊர்களிலிருந்து தேவையில்லாமல் சென்னைக்கு வந்து படைப்பாளிகளாக வேண்டிய அவசியமோ யாருக்கும் இருக்காது. ஏனென்றால், மனிதர்கள் இன்று போல மூளையைப் பிதுக்கிப் படைக்கத் தேவை இருக்காது. முக்கியமாக, சமூகவலைத்தள படைப்பாளிகள் அந்த கால போர்க் கருவிகள், பேஜர் கருவிகள் போல காணாமல் போவார்கள்.

ஏஜ தொழில்நுட்பம் ரீப்ளேஸ் செய்து கொண்டிருப்பது மனித படைப்பாற்றல் என்று நாம் இதுவரை போற்றிப் புகழ்ந்தவற்றை. நேற்றுவரை நாம் என்ன படைக்க வேண்டும் என்று ஏஜக்குச் சொல்லி அதைப் படைக்கச் சொன்னோம். இன்று, நாம் என்ன படைக்க வேண்டும் என்று ஏஜயிடம் கேட்டு அதையே ஏஜக்குச் சொல்லி அதைப் படைக்கச் சொல்கிறோம். நாளை?

நாளை பின்னோக்கிச் செல்லும். இதையும் எழுதி வைத்துக் கொள்ளுங்கள். ஊடகம் வழியேயான படைப்பாற்றலை ஏஜ கையில் எடுத்துக்

கொள்ளும்போது ஊடகத்தின் துணை தேவைப்படாத மனிதப்படைப்புகளுக்கு வேறுவித மதிப்பு கிடைக்கும். மனிதர்கள் மனிதர்களின் நேரடிப் படைப்புகளைத் தேடுவார்கள். நேரடியாக ஒருவர் பாடுவதைக் கேட்க விரும்புவார்கள். நேரடியாக ஒருவர் பேசுவதைக் கேட்க விரும்புவார்கள். நேரடியாக ஒருவரைப் பார்க்க விரும்புவார்கள். ஏஐயிடம் ஐடியா கேட்காமல் கைப்பட எழுதி மனிதர்கள் சுமந்துவந்து சேர்க்கும் கடிதப் போக்குவரத்து திரும்ப வந்து பெரிய பிஸினஸ் ஆக வாய்ப்புள்ளது. இன்றைய ஆர்கானிக் உணவுகள் போல நேரடி மனிதப் படைப்புகளுக்கு மவுசு வரும். மனிதர்களை நடிக்க வைத்து எடுக்கும் சினிமா கண்டிப்பாக காணாமல் போகும். ஆனால், மேடை நாடகங்களுக்குச் சென்று மனித படைப்பாற்றலை நேரில் பார்க்க விரும்புவார்கள். அங்கே, நடக்க முடியாத ஹீரோக்கள் ஸ்லோ மோஷனிலெல்லாம் நடக்க முடியாது.

சிலப்பதிகாரத்தின் அறங்கேற்று காதை முழுவதும் மனிதர்களால், மனிதப் படைப்பாளிகளால், மனிதர்கள் இசைக்கும் கருவிகளால், மனிதப் பார்வையாளர்களுக்காக ஒரு மேடைநிகழ்ச்சியை எப்படி நிகழ்த்துவது

என்பது பற்றியது. இதில் 'மிடறு' எழுப்பும் ஒலி பற்றிய குறிப்பு வருகிறது. இதை இசைக்கருவி என்றுதான் ரொம்ப பேர் ரொம்ப ஆண்டுகளாக நினைத்துக் கொண்டிருந்தார்கள். பஞ்ச மரபு என்ற நூலின் ஓலைச்சுவடிகள் 1950–களில் கிடைத்த பிறகுதான் தெரிந்தது இது மனித உடல் என்று. அதாவது, மனிதர்கள் தொண்டை வழியே எழுப்பும் ஒலி. இந்த 'மிடறு' வளமாக இருக்க திப்பிலி, தேன், மிளகு, தலைக்காடை, வெந்நீர் எல்லாம் கலந்தடிக்க வேண்டும் என்று ஒரு மருந்தை பஞ்ச மரபு பரிந்துரைக்கிறது. இது தெரிந்ததுதான். மிடற்றுக்குப் பகை எதுவெல்லாம் என்றும் பஞ்ச மரபு சொல்கிறது. அதாவது, குரலைக் கெடுக்கும் விஷயங்கள். அதில் ஒன்று 'புகை'. அந்த காலத்திலேயே தம்மடித்திருக்கிறார்கள் புகை கொற்றர்கள். ஏஐ–யின் முழு ஆதிக்கம் வந்தபின் சிலப்பதிகாரம் போன்ற இலக்கியங்கள் வேறுவகைகளில் மனிதர்களால் அணுகப்படும்.

15. தொல்லியல் நோக்கில் சங்ககாலம்: நூல் அறிமுகம்

— அ.கா.ஈஸ்வரன்



“தொல்லியல் நோக்கில் சங்ககாலம்” என்கிற நூலை முனைவர் கா.ராஜன் அவர்கள் 2004ஆம் ஆண்டில் எழுதியுள்ளார். இந்த நூல் இருபது ஆண்டுகளுக்கு முன்பு எழுதியது, தற்போது புதிய ஆதாரங்கள் தரவுகள் கிடைத்துள்ளன என்பது உண்மைதான், இருந்தாலும் முன்பு கிடைத்த

ஆதாரங்கள் தரவுகள் அடிப்படையில் எழுதியது இன்றும் படித்து அறிய வேண்டியதாகவே உள்ளது. அதனால்தான், இந்த நூல் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 2024–ஆம் ஆண்டில் மறுபதிப்பு கொண்டு வந்துள்ளது.

சங்கக் காலம் பற்றிய ஆய்வை சங்க இலக்கியத்தைக் கொண்டுமட்டும் ஆய்வு செய்திட முடியாது. கல்வெட்டியல், நாணயம், தொல்லியல், வெளிநாட்டார் குறிப்புகள் ஆகியவற்றையும் கொண்டே ஆய்வு செய்ய வேண்டும். சங்க இலக்கியத்தில் கிடைக்காத தகவல்கள் இதில் கிடைக்கிறது, அதுமட்டுமல்லாது சங்க இலக்கியம் என்பது ஒரு வரலாற்று ஆவணம் என்பதை இந்தப் பல்துறை ஆய்வின் மூலம் நிறுவப்படுகிறது. அதனால் சங்கக் காலம் பற்றிய ஆய்வில் பல்துறைகள் இணைந்தே காணப்படுகிறது.

முனைவர் கா.ராஜன் அவர்கள் இந்த நூலில் தொல்லியல் ஆதாரத்துடன் சங்க இலக்கியத்தை ஆராய்ந்துள்ளார். இந்த நூல் 150 பக்கங்களைக் கொண்ட சிறிய நூல் என்றாலும் நிறைந்த தகவல்களைக் கொண்டதாக இருக்கிறது. இந்த நூல் நான்கு இயல்புகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

1. பெருங்கற்படைக்காலம்
2. எழுத்தறிவு
3. வணிகம்
4. தொழில்நுட்பம்

இந்த நான்கு இயல்களில் எது விளக்கப்பட்டுள்ளது என்பதை நன்றியுரையில் நூலாசிரியர் தெளிவுபடுத்தியுள்ளார்.

“சங்கக் காலம் உருவாவதற்கு உரிய காரணிகளையும் அக்காலத்தில் நிலவிய பண்பாட்டு சூழலையும், தொழில் நுட்பத்தின் மேன்மையையும், வணிகத்தின் வளர்ச்சியையும், தமிழர்களின் எழுத்தறிவினையும் விளக்கும் வகையில் அண்மையில் வெளிப்பட்ட தொல்லியல் சான்றுகளின்’ அடிப்படையில் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. இந்நூலில் கூறப்பட்டுள்ள கருத்துகளை அறிஞர்கள் விவாதித்து இதன் நிறை குறைகளை வெளிப்படுத்த வேண்டுகின்றேன். இவை எதிர்கால ஆய்விற்குப் பெரிய உந்து சக்தியாக அமையும் என நம்புகிறேன்.”

இலக்கியம், கல்வெட்டு, நாணயம், தொல்லியல், வெளிநாட்டவர் குறிப்புகள் ஆகியவை சங்கக் காலத்தை அறிவதற்கு முதன்மைச் சான்றாக இருக்கிறது. இதில் இலக்கியமே அதிகமான தரவுகளையும் சான்றுகளையும் கொடுக்கிறது, என்றாலும் இதை மட்டும் கொண்டு சங்கக் காலத்தை முழுமையாக அறிந்து கொள்ள முடியவில்லை என்கிறார் நூலாசிரியர்.

சங்கக் காலத்தில் சமணர் இருந்தது பற்றியும், அன்றைய மன்னர்கள் வெளியிட்ட நாணயங்கள் பற்றியும், அன்றைய தமிழர்கள் செய்து வந்த வாணிகம் பற்றியும் அறிந்து கொள்வதற்குச் சங்க இலக்கியம் மட்டும் போதுமானதாக இல்லை. கல்வெட்டு, தொல்லியல், வெளிநாட்டவர் குறிப்பு ஆகியவற்றை இணைத்துப் பார்த்தால்தான் உண்மையான நிலைமையைக் கொண்டுவர முடிகிறது.

அண்மையில் எகிப்து நாட்டில் கிடைத்த கல்வெட்டில் சிகை கொற்றன், கோபன், சாத்தன், கீரன் போன்ற தமிழ் வணிகர்கள் எகிப்துக்குச் சென்று வாணிகம் செய்ததற்குச் சான்றாக இருக்கிறது. பல்துறை சான்றுகளை ஆதாரமாகக் கொண்டே சங்கக் கால மக்களை ஆராய

வேண்டும் என்பதை இதிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது.

சங்க இலக்கியம் தொகுக்கப்பட்ட காலத்துச் சிந்தனையினையும் உரையாசிரியர்களின் கருத்தையும் பார்க்கும் போது சங்கக் காலத்தில் சைவம் தழைத்தோங்கி இருந்தாகக் காட்டப்படுகிறது. ஆனால் இந்த நூல் குறிப்பிடுவதைப் போல, அன்றைய கல்வெட்டுகளின் மூலம் சமணச் சமயம் இருப்பதையும், தமிழகத்தின் கிழக்குக் கடற்கரைப் பகுதிகளில் காணப்படுகின்ற புத்தச் சமயம் சார்ந்த எச்சங்களைக் காணும் போது புத்தச் சமயம் இருந்ததையும் அறிந்து கொள்ள முடிகிறது.

சங்கக் காலச் சமூகம் வளர்ச்சி அடைந்துள்ளது என்றால், அது திடீரென்று உருவானது கிடையாது, சங்கக் கால வளர்ச்சிக்குப் பெருங்கற்கால மக்கள் காரணமாக இருக்கிறார்கள்.

பெருங்கற்கால மக்களைப் பற்றி, பெருங்கற்படைக்காலம் என்கிற இயலில் நூலாசிரியர் விவரிக்கிறார்.

இன்று திராவிட மக்களிடம் காணப்படும் நீத்தார் வழிபாடு, பெருங்கற்படைக் காலத்தில் காணப்பட்ட வழிபாட்டின் தொடர்ச்சியே ஆகும். பெருங்கற்படை வழிபாடு என்பது, கல்வட்டம், நெடுங்கல், கல்திட்டை, குடைக்கல், பதுக்கை என்கிற வழியில் வளர்ச்சி பெற்றது. இதில் முதுமக்கள் தாழியினையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். குறிஞ்சி, முல்லை ஆகிய நிலப்பகுதிகளில் கற்களால் செய்யப்பட்ட நினைவு சின்னங்கள் காணப்படுகிறது. அதே நேரத்தில் மருதம் நிலப்பகுதிகளில் முதுமக்கள் தாழிகள், அதாவது மண்குடங்களால் செய்யப்பட்டது காணப்படுகிறது. இதற்குக் காரணம் மலையைச் சார்ந்த, அல்லது கற்கள் கிடைக்கிற பகுதிகளில் கற்களால் செய்யப்பட்ட சின்னங்களும், கற்கள் கிடைக்காத பகுதியில் பானையினால் செய்யப்பட்ட சின்னங்களும் உருவானதாக அறிய முடிகிறது.

பெருங்கற்படைக் காலத்தை கற்களின் சின்னத்தைக் கொண்டு காலத்தைக் கணக்கிடமுடியாது. பெருங்கற்கால நினைவு சின்னங்கள் உருவாவதற்கு முன்பாகவே முதுமக்கள் தாழிகளைத் தமிழர்கள்

பயன்படுத்தியதை நூலாசிரியர் சுட்டிக்காட்டுகிறார்.

சங்க இலக்கியங்கள் காலவரிசையில் தொகுக்கப்படவில்லை, தொகுப்பில் காலத்தால் பிற்பட்டவை தொடக்கத்திலும் காலத்தால் முற்பட்டவை தொகுப்பின் பிற்பகுதியிலும் எனக் கலந்துகிடக்கிறது. உண்மையில் முன்பின்னாக, பின்முன்பாக என இடை இடையே கலந்து காணப்படுகிறது. கால வரிசையில் புரிந்து கொண்டால்தான் வரலாற்றின் தொடரை அறிந்து கொள்ள முடியும். இதற்கு நூலாசிரியர் காட்டுவதை வழிகாட்டுதலாக்கக் கொண்டால் ஓரளவுக்குக் கால வரிசையினைச் செய்து கொள்ளலாம்.

"... சங்க இலக்கியங்களை ஆழ்ந்து நுணுகிப் பார்க்கின்றபொழுது இச்சின்னங்களின் தோற்றத்தில் ஏற்பட்ட படிநிலை வளர்ச்சியையும் மறைமுகமாகச் சங்கப் பாடல்களின் தொன்மையையும் அறிந்துகொள்ள முடிகிறது என்பதால் இப்பண்பாட்டின் கூறுகளை அறிந்துகொள்வது அவசியமாகிறது." (பக்கம்–19)

இரும்பின் கண்டுபிடிப்பும் அதன் பயன்பாடும் பண்பாட்டு வளர்ச்சியினை விரைவுபடுத்தியது. இதுமட்டுமல்லாது இரும்பின் பயன்பாடு படிநிலை வளர்ச்சியில் விரைவுபடுத்தியது அல்லது தாண்டியது என்று கூறும்படியான வளர்ச்சி தமிழகத்தில் நடைபெற்றதை நூலாசிரியர் சுட்டுகிறார்.

வட தமிழகம் புதிய கற்காலத்தில் இருந்து இரும்பின் பயன்பாட்டினால் பெருங்கற்படைப் பண்பாட்டுக்கு மாறியது, ஆனால் தென் தமிழகம் அப்போது நுண்கற்கருவிக் காலப் பண்பாட்டில்தான் இருந்தது ஆனால் இரும்பின் கண்டுபிடிப்பும் பயன்பாடும், புதிய கற்காலத்தைக் கடந்து, தென் தமிழகத்தைப் பெருங்கற்படைப் பண்பாட்டை அடைந்தது.

இரும்பு கண்டுபிடிப்பு மனிதயின வளர்ச்சியில் பெரும் பங்காற்றியுள்ளது. நாகரிக வளர்ச்சிக்கு இரும்பு பயன்பாடு முதல்நிலை பெறுகிறது. தமிழகத்தில் காணப்பட்ட ஏற்ற இறக்கமான வளர்ச்சியினை ஒருங்கிணைந்து முன்னோக்கி எடுத்துச் செல்வதற்கு இரும்பின் பயன்பாடு முதன்மைக் காரணமாக இருந்தது. பழங்குடிகளின் மறைவும் நாகரிகத்தின் நுழைவும்

இதன் மூலம் நிகழ்ந்ததை ஆசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

"... தமிழகம் தமது இயற்கைச்சூழலின் காரணமாகவும், கனிமவளத்தின் காரணமாகவும் இரும்பின் பயன்பாட்டிற்கு அறிமுகமாகும் வரை பல்வேறுபட்ட பண்பாட்டு வளர்ச்சி நிலைகளில் இருந்துள்ளது. எனவே, ஒட்டு மொத்தத் தமிழகமும் ஒரே பண்பாட்டு கூற்றினைக் கொண்டிருந்தது எனக் கருத இயலாது. அங்ஙனம் இருக்க வேண்டிய அவசியமும் இல்லை. இருப்பினும் இரும்பின் பயன்பாடு தமிழகத்தில் புகுத்தப்பட்டபொழுது அக்கனிமம் பரவலாகத் தமிழகத்தில் கிடைப்பதால் அதன் பயன்பாட்டின் மூலம் பெற்ற உற்பத்திப் பெருக்கம் தமிழகம் ஒருமுகப்பண்பாட்டினை நோக்கி அடியெடுத்து வைக்க உதவியது. இந்நிலைப்பாடு தமிழகத்தில் கி.மு ஆயிரத்தில் தொடங்கிவிட்டது எனலாம். இரும்பின் பயன்பாட்டினால் ஏற்பட்ட உற்பத்திப் பெருக்கம் மற்றும் உபரி உற்பத்தி சமூகத்தின் பல்வேறு வளர்ச்சி சென்றது. இது சமூகத்தின் கட்டமைப்பில் பல்வேறு குழுக்களின் நிலைக்கு எடுத்துத் தோற்ற எழுச்சியையும் மன்னர், வேளிர், வேந்தர் போன்ற அரசு உருவாக்கத்திற்கும் அடிகோலியது." (பக்கம் –21)

தமிழகத்தில் இரும்பின் பயன்பாடு கி.மு. 1000 என்று இந்நூல் கூறுகிறது, ஆனால் அண்மைய கதிரியக்கக் காலக்கணக்கீடுகளின் மூலம் செய்யப்பட்ட ஆய்வுகள் தமிழகத்தில் 5000 ஆண்டுகளுக்கு முன் இரும்பை உருக்கிப் பயன்படுத்தக் கற்றுக் கொண்டுள்ளனர் என்பதைக் காட்டுகிறது. தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை 2025யில் வெளியிட்ட "இரும்பின் தொன்மை" என்கிற நூலின் முக்கிய ஆசிரியராக இந்த நூலாசிரியர் இருந்துள்ளார். பழைய நூல்களைப் படிக்கும் போது இத்தகைய புதிய தரவுகளைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இந்தியத் துணைக் கண்டத்தில் கிடைக்கப்பட்ட பழைமையான எழுத்து வடிவம் என்றால் அது சிந்துவெளி நாகரிகக் காலத்தில் கிடைத்ததே ஆகும். ஆனால் அந்த எழுத்தை இதுவரை அனைவராலும் ஏற்றுக்கொள்ளும் வகையில் படித்து உணரமுடியவில்லை. அதே போல அங்கே காணப்படும் குறியீடுகளும் அனைவராலும் ஏற்றுக் கொள்ளும் வகையில் படித்தறியபடவில்லை.

அடுத்துக் கிடைப்பது பிராமி வரிவடிவம், ஆனால் இந்த வரிவடிவம் எதிலிருந்து தோன்றியது என்பது முடிவு செய்யப்படவில்லை. தமிழகத்தில் கிடைக்கிற வரிவடிவம் தமிழ் பிராமி என்று அழைக்கப்படுகிறது. வட இந்தியாவில் கிடைத்த பிராமி வரிவடிவத்துடன் நெருக்கமான தொடர்பு இருப்பதால் இதற்கு இப்பெயர் ஏற்பட்டது.

நம்நாட்டில் கிடைக்கும் குறியீடுகளில் 75 விழுக்காடு தமிழகத்திலேயே கிடைக்கிறது. அதனால் இந்தக் குறியீடுகளை முன்வைத்து எழுத்து வரிவடிவம் வளர்ச்சி பெற்றுள்ளதைப் பற்றிய ஆய்வு செய்வது தேவையானதாக இருக்கிறது.

சங்க இலக்கியத் தொடர்புடைய ஊர்களில் இத்தகைய குறியீடுகள் தனித்தோ, தமிழ்ப் பிராமி எழுத்துகளுடனோ காணப்படுகிறது. குறிப்பாகத் திருகாம்புலியூர், உறையூர், கரூர், கொடுமணல், அழகன்குளம், மாங்குளம், தேரிருவேலி, பேரூர், வல்லம், சானூர், ஆதிச்சநல்லூர், கொற்கை போன்ற இடங்களில் கிடைக்கின்ற குறியீடுகள் ஒத்தத் தன்மையுடையனவாக இருக்கின்றன. இதனை முன்வைத்து இந்நூலாசிரியர் கூறுவது கவனத்தில் கொள்ள வேண்டியதாக இருக்கிறது.

“இக் குறியீடுகளிலிருந்து பிராமி வரிவடிவம் தோன்றியிருந்தால் இவ்வரிவடிவ உருவாக்கத்திற்குச் சொந்தக்காரர்கள் உரிமை உள்ளவர்கள் யார் என்பதைக் கண்டு கொள்ளவும் குறியீடுகளின் ஆய்வு பெரிதும் பயன்படும் என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது.” (பக்கம் — 47)

வல்லம் என்னும் இடத்தில் நடைபெற்ற அகழாய்வில் நிலத்துக்குக் கீழ் அடுக்குகளில் குறியீடுகளும் அதற்கு மேல் அடுக்குகளில் தமிழ்ப் பிராமி எழுத்துகளும் கிடைத்துள்ளது. தமிழ்ப் பிராமி எழுத்து பொறித்த பானை ஓடுகள் கிடைக்கின்ற இடங்களில் குறியீடுகள் பொறித்த பானை ஓடுகள் எண்ணிக்கையில் குறைந்து போயின. இதனைப் பார்க்கும் போது தமிழ்ப் பிராமி எழுத்து குறியீடுகளில் இருந்து வளர்ச்சி பெற்றதா? என்கிற கேள்வி எழுவதை நூலாசிரியர் சுட்டிக்காட்டுகிறார். மேலும், தகவல் பரிமாற்றத்திற்குக் குறியீட்டினைவிடச் சிறந்த கருவியாகத் தமிழ்ப் பிராமி வரிவடிவம் உருவானதால் குறியீடுகள் வழக்கில் இருந்து மங்கி விட்டனவா? என்கிற கேள்வியினை

எழுப்புகிறார். இது ஒரு முக்கியமான முதன்மையான கேள்வி ஆகும்.

குறியீடுகளை ஆய்வு செய்யும் போது அதனிடையே காணப்படும் வடிவமாற்றங்களைக் கொண்டு கால மாற்றத்தில் ஏற்பட்ட வளர்ச்சியாகப் புரிந்து கொள்ளலாம். குறிப்பாகக் கொற்கையில் கிடைத்துள்ள குறியீடுகளைக் காணும் போது 'ம' என்கிற எழுத்து வரிவடிவத்தைப் பெறுவதற்கு முன்னோடியாகத் திகழ்ந்திருக்க வேண்டும் என்கிறார் நூலாசிரியர்.

பண்டைய நூல்களில் பிராமி எழுத்துகளைக் குறிப்பிடுகிற இடங்களில் தமிழி என்கிற வரிவடிவம் தென்னகத்தில் வழக்கில் இருந்ததைக் குறிப்பிடுகிறது. இந்நிலையில் தமிழகத்தில் கிடைக்கிற குறியீடுகளின் வளர்ச்சியில் தமிழி எழுத்து தோன்றியிருக்கலாம் என்கிற கருத்து உருவாகிறது. இந்தப் பார்வையினை அவ்வளவு எளிதாக ஒதுக்கிவிட முடியாது. அதனால் இத்தகைய ஆய்வு அவசியமானதாக இருக்கிறது. இதனை இந்நூலாசிரியர் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

“மேற்கூறிய கருத்துகளின் அடிப்படையிலும், குறியீடுகளின் தன்மை, அளவு, வடிவம் ஆகியவற்றின் அடிப்படையிலும், இக்குறியீடுகள் தென்னகம் முழுவதும் பரவி இருப்பதாலும், குறிப்பாகத் தமிழகத்தில் அகழாய்வு செய்யப்பட்ட அனைத்து இடங்களிலும் இவை கிடைப்பதாலும், தமிழ்ப் பிராமி வரிவடிவங்களைப் போன்றே இவையும் இடமிருந்து வலமாக எழுதப்பட்டுள்ளதாலும், தமிழ்ப் பிராமி வரிவடிவத்திற்குரிய முக்கியத்துவத்தை இக்குறியீடுகளும் பெற்றுத் திகழ்வதாலும், குறிப்பிட்ட சில குறியீடுகள் மட்டும் ஈமச்சின்னங்களில் கிடைப்பதாலும், அத்தகைய ஈமச் சின்னங்களில் எண்ணற்ற மதிப்புமிக்க தொல்பொருட்கள் கிடைப்பதாலும், தமிழ்ப் பிராமி வரிவடிவம் வழக்கில் வந்தவுடன் இக்குறியீடுகளின் பயன்பாடு குறைந்துவிடுவதாலும், பானை ஓடுகள், நாணயங்கள், கல்வெட்டுகள் மற்றும் மோதிரங்கள் என எண்ணற்ற ஊடகங்களின் வாயிலாக இவை வெளிப்படுவதாலும், சங்கக் காலத்திற்கு முன்பிருந்தே அதாவது சிந்து சமவெளிப் பண்பாடு தொட்டுச் சில வடிவ மாற்றங்களுடன் தொடர்ந்து இவை இருந்துவந்துள்ளதாலும் இக்குறியீடுகளைச்

சாதாரணக் கீறல்கள் என எந்தவொரு ஆய்வாளராலும் ஒதுக்கிவிட இயலாது. எனவே, தமிழ்ப் பிராமி வரிவடிவம் தமிழகத்தில் பயன்பாட்டிற்கு வருவதற்கு முன்பாகவே இக்குறியீடுகளும் சமகால மக்களின் எண்ணம் அல்லது கருத்துப் பரிமாற்றத்திற்குப் பயன்படுத்தப்பட்ட ஒருவகை வரிவடிவமே என இதை எடுத்துக் கொள்ள வேண்டியுள்ளது. தமிழகத்தில் இக்குறியீடுகள் பரவலாகக் கிடைப்பதால் இந்நிலையை இவை அடையப் பல்லாண்டு காலம் ஆகியிருக்க வேண்டும் என்பதும் புலனாகிறது." (பக்கம் — 55–56)

ஐராவதம் மகாதேவன் தமிழ்ப் பிராமி கல்வெட்டுகளின் வரிவடிவத்தில் காணப்படுகின்ற ஒலிக் குறியீட்டின் அடிப்படையில் மெய்யெழுத்திற்கு இடப்படும் 'புள்ளி' புழக்கத்தில் வந்த காலத்தைக் கணக்கில் கொண்டு தமிழ்ப் பிராமி *I*, தமிழ்ப் பிராமி *II*, தமிழ்ப் பிராமி *III* எனப் பகுத்துள்ளார். ஐராவதம் மகாதேவன் ஆய்வுகளை முன்வைத்து இந்நூலாசிரியர் தொடக்கக் கால எழுத்து வடிவமான தமிழ்ப் பிராமி *I* தமிழகத்தில் மட்டும் காணப்படுவதாகக் குறிப்பிடுகிறார். இந்த

ஆய்வை அவ்வளவு எளிதாக ஒதுக்கிவிட முடியாத வகையில் இருக்கிறது.

“புள்ளியியல் அடிப்படையில் ஆய்வினை மேற்கொண்ட ஐராவதம் மகாதேவன் அவர்கள் தமிழ்ப் பிராமி I கி.மு. 2ஆம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தில் அதிகமாகவும் பின்னர்க் குறைந்து கி.மு. முதலாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் வழக்கில் இருந்து மறைந்து விடுவதாகவும், தமிழ்ப் பிராமி II கி.மு. முதலாம் நூற்றாண்டுத் தொட்டுக் கிடைப்பதாகவும், மெய்யிற்குப் புள்ளியிடும் தமிழ்ப் பிராமி III முறை கி.பி.2ஆம் நூற்றாண்டில் வழக்கிற்கு வந்ததாகவும் கணித்துள்ளார் (Mahadevan 2003:232–233).

மேற்கூறிய முதல் இரண்டு வகை எழுத்துமுறையும் இணையாக இருந்த போதிலும் அசோகர் காலக் கல்வெட்டுகளில் II வகையாகவே காணப்படுகின்றன. அசோகர்–பிராமியிலிருந்து தமிழ்ப் பிராமி எழுத்து வரிவடிவம் தோன்றியது என்றால் நேரடியாக எளிதான தமிழ்ப் பிராமி II வரிவடிவமே தமிழகத்தில் புழக்கத்திற்கு வந்திருக்க வேண்டும். ஆனால், அதற்கு மாறாகப் புதியதொரு சிக்கலான

எழுத்து வரிவடிவமுறையை இங்குப் பயன்படுத்தவேண்டிய தேவையில்லை. மேலும் அசோகர்–பிராமியில் வழக்கத்தில் இரண்டாம் இல்லாத தமிழ்ப் பிராமி எழுத்துமுறை கி.மு. நூற்றாண்டிலும், அசோகர்–பிராமி முறையில் காணப்படும் தமிழ்ப் பிராமி II கி.மு. முதலாம் நூற்றாண்டிலும் எவ்வாறு வந்தன என்பதற்கான வழிமுறைகள் கூறப்படவில்லை. அசோகர்–பிராமியிலிருந்து தமிழ்ப் பிராமி II வந்திருந்தால் தமிழ்ப் பிராமி I எங்கிருந்து வந்தது என்பதை நாம் குறிப்பிட வேண்டும்." (பக்கம் 62–63)

இத்தகைய பல்வேறு விளக்கங்களின் இறுதியில் இந்நூலாசிரியர், தமிழகத்தில் கிடைக்கும் பழந்தமிழ் வரிவடிவங்களான தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுகள் அசோகர் காலத்திற்கும் முற்பட்டவை என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை என்கிறார். இந்த ஆய்வுகளின் அடிப்படையில் "தொன்மைத் தமிழ் எழுத்தியல்" (குறியீடுகளிலிருந்து தமிழ்–பிராமியை (தமிழி) நோக்கிய பயணம்) என்கிற நூலை 2018 ஆம் ஆண்டில் இந்நூலாசிரியர் எழுதி வெளியிட்டுள்ளார்.

இறுதி இயல்களான, வணிகம், தொழில்நுட்பம் ஆகியவைகளையும் நூலாசிரியர் தொல்லியல் அடிப்படையில் விவரித்து நிறுவியுள்ளார். சங்கக் காலத் தமிழ் சமூகத்தின் வளர்ச்சிக்கும் வணிகத்துக்கும் அன்றைத் தொழில்நுட்பமே காரணமாகும். இக்காரணத்தை இறுதி இயல் விளக்குகிறது. அன்றைய பொருளாதார வளர்ச்சியைப் பற்றி நூலாசிரியர் கூறுவது கவனத்தில் கொள்ள வேண்டியதாகும்.

“ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி என்பது அந்நாட்டில் கிடைக்கும் இயற்கை வளங்களை உயர்ந்த தொழில் நுட்பத்தின் மூலம் உற்பத்திப் பொருட்களாக மாற்றி அவற்றை உள்நாட்டின் பயன்பாட்டிற்கும், வெளிநாட்டின் தேவைக்கும் அளித்து அதன் மூலம் பெறப்படும் உபரி வருவாயை ஒட்டு மொத்தச் சமூக வளர்ச்சிக்குப் பயன்படுத்துவதே ஆகும். இதில் மனிதச் சக்தியை முறையாகப் பயன்படுத்துதல் என்பது இன்றியமையாததாகும்.”

எத்தகைய ஆதாரங்கள், தரவுகள் இன்று புதியதாக வந்தாலும் இந்நூல் தனித்துச் சிறப்பிடம் பெற்றுள்ளது. இன்றைய ஆய்வுகள் இந்நூல் அடிப்படையில் தொடர வேண்டியுள்ளது,

அதனால் இந்த நூல் பல ஆண்டுகளுக்கு முன் எழுதியிருந்தாலும் இன்றும் படித்து உணர வேண்டியதாக இருக்கிறது. குறிப்பாகத் தமிழி எழுத்து பற்றிய ஆய்வை இந்த நூல் அடிப்படையில் அனைவராலும் ஏற்றுக் கொள்ளும் வகையில் நிறைவு செய்ய வேண்டும். இந்தப் பணி இன்று அவசிய, அவசரமானது. தமிழகத்தில் இரும்பின் தொன்மையினை வெளிப்படுத்தியது போல, தமிழி எழுத்தின் தொன்மையினை வெளிக்கொணர வேண்டும். இந்தப் பணிக்காக அனைத்துத் துறை சார்ந்தவர்களும் இணைந்து செயல்பட வேண்டும்.

ஆசிரியர்: முனைவர் கா.ராஜன்
வெளியீடு: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் / 2024
விலை: ₹ 125/–
அறிமுகம் எழுதியவர்: அ.கா.ஈஸ்வரன்

இந்த நூல் அறிமுகம் பின்வரும் இணையத் தளத்திலிருந்து பெறப்பட்டது (https://bookday.in/prof–k–rajans–tholliyal–nokkil–sangakalam–tamil–book–reviewed–by–ak–eswaran/)

16. தமிழ் மரபு அறக்கட்டளை நிகழ்ச்சிகள்

— பிப்ரவரி 1, 2026 — பிப்ரவரி 28, 2026 நிகழ்வுகள். —

க. உலகத் தாய்மொழி நாளை முன்னிறுத்திய தொடர் உரையரங்கம்

உலகத் தாய்மொழிகள் தினம் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி மாதம் 21ஆம் தேதி கொண்டாடப்படுகிறது.

இதனை முன்னிட்டு தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு பிப்ரவரி மாதம் முழுவதும்

தமிழ் இலக்கிய உரைகளை இலக்கிய ஆர்வலர்களுக்காக ஏற்பாடு செய்திருந்தது.

இதன்வெளிப்பாடாக ஒவ்வொரு வாரம் சனிக்கிழமையும் தொடர்ச்சியாக நான்கு வாரங்கள் தமிழ் அறிஞர் புலவர் பொ. வேல்சாமி அவர்களது இலக்கியப் பேருரையை இணையம் வழி உலகத் தமிழர்கள் கேட்டு பயன்பெற்றனர்.

உரையின் ஓர் அங்கமாக மூன்றாவது வாரம் உலகத் தாய்மொழி நாளில் முனைவர் க. சுபாஷிணி அவர்கள் எழுதிய ஐரோப்பியத் தமிழ் ஆவணங்கள் என்கிற நமது பதிப்பக நூலினை வெளியிட்டு அறிஞரே சிறப்புச் செய்தார். இந்நூலுக்குச் சங்கம் பீடியா புகழ் முனைவர் ப. பாண்டியராஜா அவர்களும் அம்பேத்கரியம் 2.0 நூல்களைத் தொகுத்து அண்மையில் வெளியிட்ட

முனைவர் கெதைம சன்னா அவர்களும் வாழ்த்துரை வழங்கினார்கள்.


ஐரோப்பியத் தமிழ் ஆவணங்கள்
அடையாளம் காணுதலும் ஆவணப் படுத்தலும்
ஐரோப்பியத் தமிழ் ஆவணங்கள் | க. சுபாஷிணி
ஐரோப்பியத் தமிழியல் மற்றும் ஐரோப்பியத் தமிழ் ஆவணங்கள் பற்றிய கலந்துரையாடல்கள் தமிழ் ஆய்வுலகம் பேராவில் கவனம் செலுத்தாத ஒரு துறையாக இருந்து வருகிறது. அந்த வகையில் அக்குறையை நிவர்த்தி செய்கிறது இந்த நூல். நூலாசிரியர் முனைவர் க. சுபாஷிணி வழங்கியிருக்கும் ஆவணங்களின் வகைகள், அவற்றின் தன்மைகள், சிறப்புகள், அவை பாதுகாக்கப்படும் இடங்கள் பற்றிய செய்திகள், ஐரோப்பியத் தமிழ் ஆவணப் பாதுகாப்பகங்களை அணுகும் முறைகள் பற்றிய செய்திகள் தமிழ் ஆய்வுலகிற்குப் புதிது. தமிழ் ஆய்வு உலகத்திற்கு இந்த நூல் ஒரு புதிய பாதையைத் திறந்து வைக்கின்றது.
க. சுபாஷிணி

இந்த தொடர் உரையரங்கில் சங்க கால மன்னர்கள், தமிழில் சமண பௌத்த நூல்கள், தமிழ் இலக்கிய வரலாறும் பாட்டியல் நூல்களும், 19ஆம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வரலாறு ஆகிய நான்கு தலைப்புகளில் அறிஞர் பொ. வேல்சாமி உரையாற்றினார். இந்நான்கு உரைகளுமே தமிழ் ஆய்வுலகிற்கு முக்கியமானவை. தமிழில் இதுவரை வெளிவந்த வரலாற்று மற்றும் ஆய்வு நூல்கள் – அந்த நூல்கள் எதையெல்லாம் விட்டுவிட்டு

எழுதப்பட்டிருக்கின்றன, அப்படி விடுபடுவதற்கான காரணங்கள், இனி நாம் செய்ய வேண்டியவை, தமிழில் இதுவரை வெளிவந்த, வெளிவராத ஆய்வுகள், அவை சொல்லும் உண்மைகள், இவற்றை நாம் இன்றைக்குத் தெரிந்து கொள்ள வேண்டியதன் தேவை என்கிற வகையில் அன்னாரது உரை அமைந்திருந்தது. தமிழ் ஆய்வுலகிற்கு இந்த நான்கு உரைகளுமே பெரும் கொடையாகத்தான் திகழும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

– முனைவர் ஆ. பாப்பா,
கடிகை பொறுப்பாளர்,
தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு

17. தமிழ் மரபு அறக்கட்டளை செயல்பாடுகள்

க. இணையவழி திசைக்கூடல் நேரலைகள்

உலகத் தாய்மொழி நாளை முன்னிறுத்திய தொடர் உரையரங்கம் – இலக்கியம் பேசுவோம்

—தமிழறிஞர் பொ. வேல்சாமி அவர்களுடன்
தலைப்பு: சங்க கால மன்னர்கள்
திசைக்கூடல் – 394 [பிப்ரவரி 07, 2026]
https://youtu.be/KKunBTO__PwU

———

உலகத் தாய்மொழி நாளை முன்னிறுத்திய தொடர் உரையரங்கம் – இலக்கியம் பேசுவோம்

—தமிழறிஞர் பொ. வேல்சாமி அவர்களுடன்
தலைப்பு: தமிழில் சமண பௌத்த நூல்கள்
திசைக்கூடல் — 395 [பிப்ரவரி 14, 2026]
https://youtu.be/5ecq4h2Wyhk

———

உலகத் தாய்மொழி நாளை முன்னிறுத்திய தொடர் உரையரங்கம் – இலக்கியம் பேசுவோம்

—தமிழறிஞர் பொ. வேல்சாமி அவர்களுடன்
தலைப்பு: வரலாறும் பாட்டியல் நூல்களும்

சிறப்பு நூல் வெளியீடு: முனைவர் க. சுபாஷிணி அவர்கள் எழுதிய ஐரோப்பியத் தமிழ் ஆவணங்கள்
திசைக்கூடல் – 396 [பிப்ரவரி 21, 2026]
https://youtu.be/QZFGZn7sUoI

———

உலகத் தாய்மொழி நாளை முன்னிறுத்திய தொடர் உரையரங்கம் – இலக்கியம் பேசுவோம்

—தமிழறிஞர் பொ. வேல்சாமி அவர்களுடன்
தலைப்பு: 19ஆம் நூற்றாண்டு இலக்கிய வரலாறு
திசைக்கூடல் – 397 [பிப்ரவரி 28, 2026]
https://youtu.be/LBupgQNPdhA

———

உ. புகழ் வணக்கம்

தோழர் நல்லக்கண்ணு அவர்களுக்குப் புகழ் வணக்கம்

2024 டிசம்பரில் தோழர் நல்லக்கண்ணு அவர்களை தமிழ் மரபு அறக்கட்டளை ஆவணப்பதிவிற்காகப் பேட்டி செய்தோம். தோழர் சி.மகேந்திரன் அவர்கள் அப்பேட்டிக்கான ஏற்பாடுகளைச் செய்து உதவியிருந்தார். ஏறக்குறைய 80 ஆண்டுகள் பொது வாழ்க்கையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு தன்னலமற்ற சேவையைத் தமிழ்ச்சமூகத்துக்கு வழங்கிய களப்போராளி.

அவருக்குத் தமிழ் மரபு அறக்கட்டளையின் அஞ்சலி.

ங. நூல் பரிசளிப்பு

முதலமைச்சர் அவர்களுக்கு நூல் பரிசளிப்பு

26.2.2026 அன்று ஜெய்பீம் பவுண்டேஷன் அமைப்பின் ஏற்பாட்டில் அம்பேத்கரியம்–50 நூல் தொகுப்பு மாண்புமிகு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களது அலுவலகத்தில் வெளியீடு கண்டது. இந்த நிகழ்வில் பங்கெடுத்துக்

கொண்ட தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பின் தலைவர் முனைவர் க சுபாஷிணி அவர்கள் நமது பதிப்பகத்தின் வெளியீடான மக்கள் வரலாறு தொகுதி 1,2,3 அடங்கிய தொகுதியை முதலமைச்சர் அவர்களுக்குப் பரிசாக வழங்கினார்.

தமிழ் மரபு அறக்கட்டளை வெளியீடுகள்

ஐரோப்பியத் தமிழ் ஆவணங்கள்

மக்கள் வரலாறு (3 தொகுதிகள்)

வள்ளுவர் குறள் ஆத்திச்சூடி முறையில்

விண்ணை நோக்கி

தொல்மனித இனங்களும் மனிதகுல இடப்பெயர்வுகளும்

மக்கள் வரலாறு தொடக்கமும் தொடர்ச்சியும் தொகுதி - 1

மட்டக்களப்பு

தமிழ்ப் புத்தாண்டு சர்ச்சைகளும் தீர்வுகளும்

கொரியாவில் தமிழ்ச் சுவடிகள்

தமிழர் புலப்பெயர்வு

பொருள்முதல்வாதப் பார்வையில் ஆதிசங்கரரின் அத்வைதம்

இலக்கிய மீனாய்வு

இராஜேந்திர சோழனின் ஒப்பற்ற நாடு வெற்றி

நிலவியல் நோக்கில் கங்கை கொண்ட சோழபுரம் வரலாறு

கணிதவியல் - பொதுக் கட்டுரைகள்

தமிழகத்தில் பௌத்தம்

விளையாடிய தமிழ்ச் சமூகம்

கல்வெட்டில் தேவதாசி

தொல்லியல் நோக்கில் தமிழ்நாட்டுக் கடவுளரும் வழிபாட்டு மரபுகளும்

வரலாற்றில் பொய்கள்

தமிழ் மரபு அறக்கட்டளை வெளியீடுகள்

தமிழ் வலசை

மணிமேகலையின் பௌத்தப் பேரறம்

செம்மொழியும் மின் தமிழும்



Ancient Tamil Corpus: A Key T
Understand The Indus Riddle

சங்க இலக்கியம் எனும் சிந்துவெளி திறவுகோல்

தமிழக நிலப்பரப்பில் பாதை மாறிய ஆறுகள்

தமிழக நிலப்பரப்பில் பின்வாங்கிய கடல்களும் கடல்கொண்ட நிலங்களும்

வரலாற்று நிலையில் நோக்கில் திரும்பரம் நகரும் நகர்ப்புறமும்

நீலக்கடல் முழுவதும் கப்பல் விடுவோம்

பத்துப்பாட்டில் சொல்லோவியங்கள் (தொகுதி 2)

பத்துப்பாட்டில் சொல்லோவியங்கள் (தொகுதி 1)

நக்கீரர் நடைப்பயணம் (தெடுநல்வாடை)

வரலாற்று ஆய்வில் களப்பணிகள்

ராஜராஜனின் கொடை

கொங்கு நாட்டுக் கல்வெட்டுகள்

கொங்கு நாட்டுத் தொல்லியல் சின்னங்கள்

கீழக்கரை வரலாறு

நாகர நிலச்சுவடுகள்

அறியப்பட வேண்டிய தமிழகம்

திருவள்ளுவர் யார்?

தமிழ் மரபு அறக்கட்டளை வெளியீடுகள்

1. Der Kural Des Thiruvalluvar
   By Dr.Karl Graul (First edition 1856 reprinted - 2019) Euro.25

2. Thiruvalluvar's Prose
   By August Fridrich Cammerer(First edition 1803 reprinted - 2019) Euro 25

3. **திருவள்ளுவர் யார்?** (2021)
   ஞானசம் சன்னா ரூ.200

4. **நாகர் நிலச்சுவடுகள் (இலங்கை பயண அனுபவம்)** (2020)
   மலர்விழி பாஸ்கரன் ரூ.100

5. **அறியப்பட வேண்டிய தமிழகம்** (2021)
   ஞா. பரமசிவன் நேர்காணலும் கட்டுரைகளும்
   ஞானகுப்பாசிரியர் - முனைவர்.க.சுபாஷிணி ரூ.80

6. **கீழக்கரை வரலாறு** (2021)
   எஸ்.மஹ்மூது ஞெய்னா (இப்போது.காம் இணைபதிப்பு) ரூ.300

7. **கொங்குநாட்டுக் கல்வெட்டுகள்** (2021)
   துரை சுந்தரம் ரூ.160

8. **கொங்கு நாட்டுத் தொல்லியல் சின்னங்கள்** (2021)
   துரை சுந்தரம் ரூ.140

9. **தொல்லியல் நோக்கில் தமிழ்நாட்டுக் கடவுளரும் வழிபாட்டு மரபுகளும்**(2021)
   கோ. சசிகலா ரூ.180

10. **வரலாற்றில் பொய்கள்** (2021)
    தேனிமாழி ரூ.100

11. **விளையாடிய தமிழ்ச்சமூகம்** (2022)
    ஆ. பாப்பா ரூ.300

12. **கல்வெட்டில் தேவதாசி** (2022)
    எஸ் சாந்தினிபி ரூ.150

13. **ராஜராஜனின் கொடை** (2022)
    க. சுபாஷிணி ரூ.180

14. **இலக்கிய மீளாய்வு** (2023)
    தேனிமாழி ரூ.150

15. **கணிதவியல்** (2023)
    ப. பாண்டியராஜா ரூ.180

16. **ராஜேந்திர சோழனின் ஒட்ர நாடு வெற்றி** (2023)
    ஞா. ஆர். சிவராமகிருஷ்ணன் ரூ.90

17. **வரலாற்று ஆய்வில் களப்பணிகள்** (2023)
    க. சுபாஷிணி ரூ.120

18. **தமிழகத்தில் பௌத்தம்** (2023)
    தேனிமாழி ரூ.120

19. **நிலவியல் நோக்கில் கங்கைகொண்ட சோழபுரம் வரலாறு** (2023)
ஜெ. ஆர். சிவராமகிருஷ்ணன் ரூ.300

20. **நீலக்கடல் முழுதும் கப்பல் விடுவோம்** (2023)
நரசய்யா ரூ.150

21. **பொருள்முதல்வாதப் பார்வையில் ஆதிசங்கரரின் அத்வைதம்** (2023)
அ. கா. ஈஸ்வரன் ரூ.180

22. **பத்துப்பாட்டில் சொல்லோவியங்கள் - தொகுதி 1** (2023)
ப. பாண்டியராஜா ரூ.250

23. **பத்துப்பாட்டில் சொல்லோவியங்கள் - தொகுதி 2** (2023)
ப. பாண்டியராஜா ரூ.250

24. **நக்கீரர் நடைப்பயணம்** (2024)
ப. பாண்டியராஜா ரூ.180

25. **தமிழர் புலப்பெயர்வு உலகளாவிய பயணங்கள்-குடியேற்றங்கள்-வரலாறு** (2024)
க. சுபாஷிணி ரூ.500

26. **கொரியாவில் தமிழ்ச் சுவடுகள்** (2024)
நா. கண்ணன் ரூ.220

27. **வரலாற்று நிலவியல் நோக்கில் சிதம்பரம்-நகரும் நகர்ப்புறமும்** (2024)
ஜெ. ஆர். சிவராமகிருஷ்ணன் ரூ.320

28. **தமிழக நிலப்பரப்பில் பின்வாங்கியகடல்களும் கடல்கொண்டநிலங்களும்** (2024)
ச. சிங்காரநெஞ்சன் ரூ.140

29. **தமிழக நிலப்பரப்பில் பாதை மாறிய ஆறுகள்** (2024)
ச. சிங்காரநெஞ்சன் ரூ.120

30. **சங்க இலக்கியம் எனும் சிந்துவெளி திறவுகோல்** (2024)
தமிழ் மரபு அறக்கட்டளை ரூ.120

31. **மக்கள் வரலாறு: தொடக்கமும் தொடர்ச்சியும் தொகுதி - 1** (2024)
க. சுபாஷிணி ரூ.200

32. **தொல்மனித இனங்களும் மனிதகுல இடப்பெயர்வுகளும்** (2024)
க. சுபாஷிணி ரூ.180

33. **மட்டக்களப்பு: வரலாறு, சமூகம், பண்பாடு** (2024)
ஆ.பாப்பா, மு.இறைவாணி ரூ.280

34. **தமிழ்ப் புத்தாண்டு சர்ச்சைகளும் தீர்வுகளும்** (2024)
தேமொழி ரூ.250

35. **தூரக் கிழக்கில் தமிழ் ஆய்வுகள்: கொரியா** (2025)
நா. கண்ணன், க. சுபாஷிணி, சூ. ஆம்ஸ்ட்ராங் ரூ.250

36. **விண்ணை நோக்கி இலக்கியத்தில் அறிவியல் செய்திகள்** (2025)
தேமொழி ரூ.180

37. **மக்கள் வரலாறு தொடக்கமும் தொடர்ச்சியும் தொகுதி - 2** (2025)
க. சுபாஷிணி ரூ.250

38. **மக்கள் வரலாறு தொடக்கமும் தொடர்ச்சியும் தொகுதி - 3** (2025)
க. சுபாஷிணி ரூ.250

39. **தமிழ் வலசை** (2025)
சிவ இளங்கோ ரூ.150

40. **மின்தமிழும் செம்மொழியும்** (2025)
நா. கண்ணன் ரூ.220

41. **வள்ளுவர் குறள் ஆத்திசூடி முறையில்** (2025)
தேமொழி ரூ.50

42. **Ancient Tamil Corpus:A key to understand the Indus Riddle** (2025)
Tamil Heritage Foundation ரூ.120

43. **மணிமேகலையின் பௌத்தப் பேரறம்** (2025)
அரங்கமல்லிகா ரூ.300

44. **Life and Achievements of Chola Emperor Rajaraja I Redefined** (2025)
Sundhar Bharadhwaj ரூ.450

தமிழ் மரபு அறக்கட்டளையின் பதிப்பக நூல்களை சென்னையில். **டிஸ்கவரி புக் பேலஸ்; ஆழி பதிப்பகம்; எமரால்ட் பதிப்பகம்** ஆகிய இடங்களில் நேரில் வாங்கலாம்.
நூல்களை **இணையம் வழியாக** கீழ்க்காணும் தளங்களில் பெறலாம்:

1. https://www.commonfolks.in/books/tamil–heritage–foundation
2. https://wisdomkart.in/books–publication/tamil–heritage–foundation/

2026 புதிய வெளியீடு: "ஐரோப்பியத் தமிழ் ஆவணங்கள் அடையாளம் காணுதலும் ஆவணப் படுத்தலும்"
முனைவர் க. சுபாஷிணி

தமிழ் மரபு அறக்கட்டளை
Tamil Heritage Foundation
THF
தமிழர் வரலாற்றுக்கு ஓர் அரண்

Electronic Preservation of Tamil Heritage Materials
e-BOOK Series

an international NGO initiative to digitize
old Tamil Books and Palm Leaf Manuscripts
visit: http://www.tamilheritage.org/

தமிழ் ஓலைச்சுவடிகள், நூல் பாதுகாப்பு

பாதுகாப்பற்ற நிலையில், மறுபதிப்பு காணாத பழைய நூல்கள்,
ஓலைச்சுவடிகள் போன்ற தமிழ் முதுசொம்களை மின்பதிப்பாக்கி
தமிழ் வளத்தை நிரந்தரமாக்கும் ஒரு சர்வதேச தன்னார்வ முயற்சி
மேலும் அறிய: http://www.tamilheritage.org/

முதுசொம் முத்திரை
தமிழ்ப்பாதுகாப்பின் அக்கறை